
ஆரம்பம் 1969 பெப்ரவரி

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

அறிவோம்.. அறிவிப்போம்...

ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்



இயேசு ....

இறப்பதோடு நின்றுவிடாமல்

உயிர்ப்பார்

தொடர்ந்தும் உன்னை நேசிப்பதற்காக ....

50/=

ஏப்ரல் - 2019

# தொண்டன்

ஏப்ரல் – 2019

மலர் - 51 இதழ் - 03

✤ ஆசிரியர்
அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

✤ துணை ஆசிரியர்
பெஸ்லியோ வாஸ்

✤ கணினி வடிவமைப்பு
சுபாஜெனி சங்கர்

✤ வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

✤ முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். – 44,
மட்டக்களப்பு.

✤ பதிப்பகம்
வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.

## உள்ளே...

அன்புடன் உங்களோடு ........ 01
வாழ்வா? சாவா? ........ 02
ஒரே கடவுளை ........ 05
உயிரோட்டம் உள்ளதா ........ 06
சீரிய சிந்தனை ........ 08
மாணவர் பக்கம் ........ 09
நிச்சயமாய் வாழ்வுயரும் ........ 10
இலக்கிய மஞ்சரி ........ 11
கனவு காணுங்கள் ........ 13
சின்ன விசயங்கள் சிறந்த ........ 15
அமாவாசை அஸ்தமித்தது ........ 16
தொண்டன் புகழ் ........ 19
எனக்கு என்ன செய்தாய்? ........ 20
கடுகுக் கதை ........ 21
மரியாள் இணைந்த ........ 22
தாய் மண்ணே ........ 24
நடந்தது நடந்துவிட்டது ........ 25
வினாவிடைப் போட்டி ........ 26
திருவிவிலியம் கற்போம் ........ 27
அறிவை வளர்ப்போம் ........ 28

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com

விலை: : 50/=
ஆண்டுச் சந்தா : 950/=
(தபால் செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு...

## பரபாஸ் கேட்ட குரல்!

அன்புமிக்கவர்களே!

கடவுளின் மகனுக்கு இப்படி ஒரு இறப்பா? வேதனை கொடுக்கிறது. வேறு வழியில்லயா?
கட்டாயம் இறக்கத்தானா வேணும்?
கடவுள் தன் மகனின் இறப்பை அனுமதித்துவிட்டு வேடிக்கை பார்க்கின்றாரா?
சொந்த மகனையே எங்களுக்காகப் பலியாகக் கொடுக்கின்ற அளவுக்கு எங்களை அன்பு செய்கிறார் என்பதை இயேசுவின் இறப்பு உணர்த்துகிறது.

பரபாஸ் சிறையில் இருக்கின்ற போது கேட்ட குரல்.... "சிலுவையில் அறையும்",
"சிலுவையில் அறையும்"

குரல் கேட்டவுடன் நினைத்திருப்பான் "மக்களுக்காகக் கலகம் செய்தேன், காத்திருக்காமல் அவர்களே என்னைக் கொல்லப் போகிறார்களே. அதுதான் எல்லோரும் சேர்ந்து கத்துகிறார்கள்" என்று தனது கடைசி நாளை, நேரத்தை நினைத்து கவலைப்பட்டிருப்பான்.

"சிலுவையில் அறையும்" (Crucify Him) என்ற இந்த சத்தம் முதன் முதலில் கேட்டபோது 'பரபாஸ் விடுதலை பெற்றான். ஆனால் இயேசுவோ மரணத்தீர்வை பெறுகின்றார்'.

அவனுடைய இடத்தில், அவன் அனுபவிக்கவேண்டிய துன்பம், அவன் அறையப்பட வேண்டிய இடம் இவையெல்லாம் இயேசுவுக்கு கிடைக்கிறது.

இரண்டு கள்வர்கள் மத்தியில் அவர் இறந்து போனார். யாருக்காக?

என்னுடைய பாவம்
என்னுடைய சந்தேகம்
என்னுடைய கோபம்
என்னுடைய பொறாமை
என்னுடைய பண ஆசை எல்லாம் அவரைக் கொன்றுவிட்டது.


ஒவ்வொரு தடவையும் பிழைவிட்டு நாம் பாவம் செய்கிறபோது இயேசு வேதனையோடு இறக்கிறார்....

இறப்பதோடு நின்றுவிடாமல் உயிர்பார் தொடர்ந்தும் உன்னை நேசிப்பதற்காக.....

சிந்திப்போம் வாழ்வை மாற்றிக் கொள்வோம் .........

- ஆசிரியர் -

"எனது நேரம் இன்னும் வரவில்லை"
(யோவான் 2:4)






- பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை -
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

"நம்பிக்கையைத் தொடங்கி வழிநடத்துபவரும், அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களைப் பதிய வைப்போம். அவர் தாம் அடைய விருந்த மகிழ்ச்சியின் பொருட்டு இழிவையும் பொருட் படுத்தாமல் சிலுவையை ஏற்றுக்கொண்டார். இப்போது, கடவுளது அரியணையின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார்" (எபி 12:2). தவக்காலத்தில் நமது சிந்தனையின் கருப் பொருளாக அமைவது சிலுவையாகும். "யூதருக்கு தடைக்கல்லாகவும், பிற இனத்தாருக்கு மடமையாகவும் இருந்தது சிலுவை" (1 கொரி 1:23). "மரத்தில் தொங்க விடப்பட்டோர் சபிக்கப்பட்டோர்" (இச 21:23) எனத் திருச்சட்டம் கூறியது. எனவேதான் பவுல் அடிகளார் "நமக்காக கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக்கொண்டார்" (கலா 3:13) என்று கிறிஸ்துவின் மரணத்துக்குத் தகுந்த விளக்க மளிக்கின்றார். தமது சிலுவைப்பாடுகள், சாவு வழியாக இயேசு நமக்கான முழுக்கடனையும் தீர்த்தார். ஆதாம், ஏவாள் பாவத்தால் தாறுமாறாக எழுதப்பட்ட மனித குலத்தின் தலையெழுத்தை அழித்து அதை நேராக எழுதி இறைவனுடன் நம்மை ஒன்றிணைக்க இயேசு நமக்காக மரித்தார். இயேசு சிலுவையில் "எல்லாம் நிறைவேறிற்று" என்று கூறியது, நாம் ஒவ்வொரு வரும் நமது பாவங்களால் கடவுளுக்குப் பட்டிருந்த கடன் களையெல்லாம் இயேசு தனது விலைமதிப்பில்லாத மாசு மறுவற்ற இரத்தத்தை விலையாகக் கொடுத்து முற்றிலும் அடைத்து விட் டார் என்பதாகும்.

**நாம் வாழ்வு பெற அவர் சாவை ஏற்றார் :**

நாம் வாழ்வு பெற அவர் சாவை ஏற்றார். அதுவே தன் தந்தையின் விருப்பம் என்பதை அறிந்திருந்தார். தந்தையின் விருப்பத்தை புனித யோவான் சுருக்கமா கக் கூறுகின்றார்: "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியா மல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்" (யோவா 3:16). கடவுள் எதற்காகத் தம் மகனை உலகிற்கு அனுப்பினார் என்பதை யோவான் தம் மடலிலும் விளக்குகிறார், "நாம் கடவுள் மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல, மாறாக அவர் நம்மீது அன்பு கொண்டு தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பி னார் என்பதில்தான் அன்பின் தன்மை விளங்குகிறது" (1 யோவா 4:10). அவரது அன்பு வரையறையற்றது; நிபந்தனையற்றது; தணிக்கப்பட முடியாதது; தேடிக் காணக் கூடாதது; அழிவற்றது; வர்ணிக்கமுடியாதது.

**வாழ்வளிக்கும் பாஸ்கா செம்மறி :**

இயேசுவை பாஸ்கா செம்மறி என்றும், முதல் பாஸ்கா செம்மறியின் இரத்தம் இஸ்ரயேல் மக்களின் உயிரை எகிப்தில் காத்தது போல, நமது புதிய பாஸ்கா செம்மறியான இயேசுவின் இரத்தம் நமது பாவத்தின் பலனான நித்திய மரணத்திலிருந்து நம்மை மீட்டது என்றும் யோவான் கூறுகின்றார். பாஸ்கா செம்மறியை இஸ்ரயேல் மக்கள் உண்ண வேண்டும் என்று கடவுள் பணித்தது போல, நமது செம்மறியான இயேசுவை நாம் நற்கருணையில் உண்ண வேண்டும் என்கிற நற்கருணை இறையியலையும் புனித யோவான் வழங்குகின்றார்.

திருமுழுக்கு யோவான் தனது நற்செய்தியில், "இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்" (யோவா 1:29) என்று கூறியதும் "தந்தை என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழியவிடாமல் (யோவா 6:39) என்னும் இயேசுவின் விருதுவாக்கும் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் தாகம் தணியாதவராக கல்வாரி வரை சென்று பலியான செம்மறியின், "சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வடைய மாட்டீர்கள்" (யோவா 6:53) என்று ஏற்கனவே யோவான் கூறியதும் இன்று நிறைவேறின.

**நாம் வாழ்வு பெற அவர் பலியானார் :**

நாம் சாகாமலிருக்க பாவமற்ற புனிதரின் இரத்தம் தேவைப்பட்டது. தந்தைக் கடவுள் தமது மகனின் விலைமதிப்பற்ற மாசற்ற இரத்தத்தைச் சிந்தி நம்மை மீட்டார். இந்த நாளைத்தான் ஒவ்வொரு திருப்பலியிலும், ஞாயிறு திருப்பலியிலும் நன்றியுடன் நினைவு கூர்ந்து கொண்டாடுகிறோம். நம்மில் எத்தனை பேர் தவறாமல் ஞாயிறுத் திருப்பலிக்குச் செல்கிறோம்? "அவர் நிறைவுள்ளவராகி, தமக்குக் கீழ்ப்படிவோர் அனைவரும் என்றென்றும் மீட்படையக் காரணமானார்" (எபி 3:9). ஞாயிறு தோறும், பாவத்தின் பிடியிலிருந்த நம்மை இயேசு தனது இறப்பு, உயிர்ப்பு வழியாக மீட்டதைத்தானே கொண்டாடுகிறோம்.

**கிறிஸ்தவ வாழ்வு ஒரு பயணம் :**

கிறிஸ்தவ வாழ்வு ஒரு விண்ணகம் நோக்கிய பயணம். இப்பயணத்தில் சிலுவை, தீர்ப்பிடப்படுதல், அறையப்படுதல், கல்வாரி போன்ற இன்னல்கள், சிலுவையில் துன்பங்கள் உள்ளன. இந்தத் துன்பங்களுக்குப் பின்புதான் உயிர்ப்பு உண்டு என்பதை விளக்கும் விழா குருத்து ஞாயிறு. இயேசு வெற்றி வீரராக, யூதர்களின் அரசராக எருசலேம் நோக்கிப் போகும் பயணம் ஒரு வெற்றிப் பயணம்: உயிர்ப்பில் முடியப் போகும் பயணம். கிறிஸ்தவ வாழ்வு துன்பமில்லா வாழ்வு அல்ல; சிலுவைக்குப் பின் உயிர்ப்பை எதிர்பார்த்திருக்கும் வாழ்வு.

**இயேசுவின் உயிர்ப்புச் செய்தி :**

சாவும், வாழ்வும் ஒன்றாகப் பூட்டி வைக்கப்பட்ட கல்லறையிலிருந்து சாவைத் தோற்கடித்து வாழ்வு வென்றது. ஆதிப் பெற்றோரின் பாவத்தால் மனித இனத்தைத் தன் பிடிக்குள் வைத்திருந்த சாவை இயேசுவின் உயிர்ப்பு முழுவதும் வென்றுவிட்டது. "சாவே, உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?" (1 கொரி 15:55) என்று சொல்லி, கிறிஸ்து சாவை வென்று நிறைவாழ்வை அளித்துவிட்டார். இந்த வெற்றியைக் கொண்டாடத்தான் நாற்பது நாட்களாக பாடாமல் இருந்த 'அல்லேலூயா' என்னும் கீதத்தை ஆர்ப்பரித்து இன்று பாடுகின்றோம்.

இயேசுவின் உயிர்ப்பு என்பது வரலாற்று நிகழ்வு அல்ல; மீண்டும் மீண்டும் எங்கேயாவது நடைபெறுவதற்கு! மாறாக அது வரலாற்றை உருவாக்கிய நிகழ்வு! வரலாற்றில் ஒரே ஒரு முறை மட்டும் இடம்பெற்ற இந்த நிகழ்வு ஒட்டுமொத்த மனித வரலாற்றையே மாற்றி அமைத்துவிட்டது. சாவுக்கு அடிமையாகக் கிடந்த மனித வாழ்வை மீண்டும் நிலையான, நிறைவான வாழ்வுக்கு இட்டுச் சென்றது. இப்படி வரலாற்றையே மாற்றியமைத்த இந்த மாபெரும் நிகழ்வை இயேசுவின் சீடர்களைப் போல நமதாக்கி மாபெரும் உயிர்ப்பின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறோம். இயேசுவின் உயிர்ப்பு அனுபவத்தை நாம்

எப்படிப் பெற்றுக்கொள்வது? இயேசுவின் உயிர்ப்பு அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்?

**உயிர்ப்பு அனுபவம் :**

யோவான் நற்செய்தியின் 20ஆம் அதிகாரத்திலே இடம்பெறும் அந்த உயிர்ப்பு அனுபவ நிகழ்வு நமக்கு வெளிச்சம் தருகிறது. இயேசுவின் மரித்த உடலுக்கு மரியாதை செய்ய முதலில் கல்லறைக்கு வருகிறார் மகதலா மரியா. காலியான கல்லறையைப் பார்த்த உடனே அவருடைய அனுபவம் "என் ஆண்டவரின் உடலை யாரோ எடுத்துக்கொண்டு போய் விட்டனர்" என்பதுதான். எனவே, விரைந்து சென்று திருத்தூதர்களான பேதுருவிடமும், மற்ற சீடரிடமும் அறிவிக்கின்றாள். செய்தியைக் கேட்டு பேதுருவும், மற்ற சீடர்களும் விரைந்து கல்லறைக்கு வருகின்றனர். கல்லறையின் காட்சியைக் கண்டு முதலில் ஆண்டவர் உயிர்த்து விட்டார் என நம்பியது ஆண்டவர் தனி அன்பு செய்த மற்றச் சீடர்தான்.

இக்காட்சியைக் கண்டு கொண்ட பேதுருவும் மற்றச் சீடரும் திருத்தூதர் தங்கியிருந்த இடத்துக்குச் சென்றுவிட, அங்கேயே நின்றுகொண்டிருந்த மரியா தன்னைப் பெயர்சொல்லி அழைத்த ஆண்டவரைக் கண்டுகொண்டு நம்பினார். மகதலா மரியாவோ, பேதுருவோ நம்பவில்லை. மற்றச் சீடர் என்றழைக்கப்படும் யோவான் தான் முதலில் உயிர்ப்பை நம்பினார்: ஏற்றுக் கொண்டார்: உயிர்ப்பு அனுபவத்தைப் பெற்றுக் கொண்டார். பிறகு யோவானுக்கு அடுத்த நிலையில் உயிர்ப்பை ஏற்றுக்கொண்டு அந்த அனுபவத்தைப் பெற்றவர் மகதலா மரியா.

எனவே, இயேசுவின் உயிர்ப்பு அனுபவத்தை நாமும் பெற்றுக் கொள்ள செய்ய வேண்டியது ஆண்டவரை அன்பு செய்வது. ஆண்டவரை அன்பு செய்கிறவர்களால் மட்டுமே உயிர்ப்பு அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆண்டவரை அன்பு செய்யாமல் அவருடைய உயிர்ப்பிலே பங்கு பெறுவதும் உயிர்ப்பு அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதும் சாத்தியமில்லாத ஒன்று. எனவேதான் உயிர்த்த ஆண்டவர் கடற்கரையிலே பேதுருவிடம் "நீ என்னை அன்பு செய்கிறாயா?" (யோவா 21:15-17) என்று மும்முறை கேட்டு அவரது அன்பை ஆழப் படுத்தினார். இயேசுவின் அன்பில் ஆழமாகச் செல்பவர்கள்தான் உயிர்ப்பிலே பங்குகொண்டு புதிய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.


**உயிர்த்த வாழ்வு :**

இயேசுவை அதிகமாய் அன்பு செய்து அவருடைய உயிர்ப்பு அனுபவத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் என்ன செய்வார்கள்? முதலில் உயிர்ப்பு அனுபவத்தைப் பெற்றவர்கள் மகதலா மரியாவைப் போல அதை மற்றவர்களுக்கு அறிவிப்பார்கள். திருத்தூதர் யோவான் தன்னுடைய வாழ்வின் இன்ப-துன்பங்களை, வேதனை-சோதனைகளை, கண்ணீர்-கவலைகளை ஏற்றுக் கொண்டு முதிர்ந்த வயது வரை வாழ்ந்து, இறையன்பில் நிலைத்திருந்தார். எனவே, உயிர்ப்பு அனுபவம் நம் வாழ்வின் சவால்களை ஏற்று வாழ நமக்கு வழிகாட்டும். திருத்தூதர் பேதுரு திருச்சபையின் தலைவராக இருந்து இயேசுவுக்காகத் தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டு மறைசாட்சியாக மரித்தார். திருத்தூதர் பவுலோ "இனி வாழ்பவன் நானல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" (கலா 2:20) எனத் தனது உயிர்த்த வாழ்வு பற்றிக் கூறுகிறார். எனவே, உயிர்ப்பு அனுபவம் இயேசுவுக்காக வாழ்ந்து அவருக்காக மரிக்க நமக்கு மனத் தைரியத்தைக் கொடுக்கும்.

கிறிஸ்து உயிர்த்தார் சாவு அழிந்தது!
கிறிஸ்து உயிர்த்தார் பாவம் ஒழிந்தது!
கிறிஸ்து உயிர்த்தார் தீமை மறைந்தது!
கிறிஸ்து உயிர்த்தார் வாழ்வு பிறந்தது!
கிறிஸ்து உயிர்த்தார் மனிதம் மலர்ந்தது!
கிறிஸ்து உயிர்த்தார் புனிதம் விளைந்தது!

கிறிஸ்து உயிர்த்தார் என்பது வெறும் செய்தி அல்ல; அதுவே நமது விசுவாசம்! இந்த விசுவாசத்தின் மறைபொருளை மகிழ்வோடு கொண்டாடி உயிர்ப்பு அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உயிர்த்த ஆண்டவர் கொண்டு வந்த மகிழ்ச்சியும் சமாதானமும் உங்கள் உள்ளங்களையும் இல்லங்களையும் நிரப்புவதாக!

அனைவருக்கும் உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்!





இருட்டறையில் கறுப்புப்பூனையை
தேட முடியாதென்பது!
குருநானக்கின் தத்துவம்!

இதனை நாம் பொய்யாக்குவோம்!

இருள் சூழ்ந்த உலகில்
ஒரே கடவுளை நம்புகின்றேன்
என்ற வார்த்தையினை
நமது வாழ்க்கையின்
மகுட வாக்கியமாக்குவோம்!

அதன்படி வாழுவோம்

விண்ணகத்தில் மணிமுடிதரித்த
இயேசுராஜனின் தர்பாரில்
நமக்கும் இடம் கிடைக்கும்!
ஒரே கடவுளை நம்புகின்றேன்!

கலைக்கோட்டன் சு. உதயநாதன்

# ஒரே கடவுளை ....!

ஒரே கடவுளை நம்புகிறேன்!
மனிதா!
நமது நம்பிக்கை அறிக்கையின்
முதலாவது வார்த்தையிது!
நமது விசுவாச வாழ்வின் அச்சாணி!
திருச்சபையின் மூல வேரும் இதுவே!

நம்புகின்றேன் நம்பிக்கை...!
இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பதும்
நம்பிக்கை என்பதையே!

அனைத்து நற்செய்திகளையும்
நம்பிக்கை என்னும் பாத்திரத்தில்
ஏற்று சுவைப்போம்!


## நம் ஆன்மீக சோம்பலால் இழக்கப்படும் வாய்ப்புகள் ....

திருத்தந்தை :

மனம் திரும்புவதற்கு நமக்கு கொடுக்கப்படும் வாய்ப்பை நாம் உதறித் தள்ளினால், அத்தகையதொரு வாய்ப்பு மீண்டும் கிடைக்காமல் போகலாம்...

மனம் திரும்பலுக்கு உரிய வாய்ப்பு, கால வரையறையின்றி, கணக்கு வழக்கின்றி கொடுக்கப்படுவதல்ல. அது எப்போது கிடைக்கின்றதோ அதை உடனே பற்றிக் கொள்ளவேண்டியது அவசியம் .

மற்றவர்களைப் பற்றி கவலைப்படாமல், மற்றவர்களுக்கு எதையும் வழங்காமல், தன்னலத்திலேயே முடங்கிப்போய் எவ்வித பலனுமின்றி வாழும் மனிதர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்தி, அவர்களின் வழிகளை மாற்ற முடியும்.



இத் தவக்காலத்தில் நமக்கு விடப்படும் மனம் திரும்பல் குறித்த அழைப்புக்கு நன் முறையில் பதிலளித்து, இறை இரக்கத்தில் நம்பிக்கை கொண்டு மீண்டும் எழுந்து நடக்கவேண்டிய தேவையை உணர்ந்து, பிறருடன் நல் உறவுகளை வளர்த்துச் செயல்பட வேண்டும் என்ற அழைப்பையும் முன் வைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# உயிரோட்டம் உள்ளதா வாழ்க்கையில் ????



எல்லோருமே வாழக்கையில் மகிழ்ச்சியைத் தேடுகிறோம்; ஓர் அர்த்தத்தைத் தேடுகிறோம்; வெற்றியடைய ஆசைப்படுகிறோம். மகிழ்ச்சியும், அர்த்தமும், வெற்றியும் எவையெவையென்பது ஒருவருக்கொருவர் மாறுபடும் விசயங்கள் என்றாலும், எல்லோருடைய தேடலும் அவற்றை நோக்கியே இருக்கின்றன. என்றேனும் ஒரு நாளில் வெற்றியடைவோம், வாழ்வில் அர்த்தம் கண்டு பிடிப்போம், மகிழ்ச்சியடைவோம் என்ற எதிர்பார்ப்பில் தினசரி வாழ்க்கையைக் கோட்டை விடும் முட்டாள்தனம் பலரிடம் இருக்கிறது.

பலரது தினசரி வாழ்க்கை இயந்திரத்தனமாக இருந்து வருகின்றது. என்றோ வாழப்போகும் நல்லதொரு வாழ்க்கைக்கான ஓட்டப்பந்தயமாக இருந்து விடுகிறது. வாழ்கின்ற வாழ்க்கை சரிதானா என்ற சந்தேகம் அடிக்கடி வர அடுத்தவர்களைப் பார்த்து அவ்வப்போது மாற்றிக்கொள்கிறதாகி விடுகிறது. இயற்கையான ஆரம்ப இலக்குகள் மாறி பணம், புகழ், படாடோபம் என்ற இலக்குகள் பெரும்பாலானவர்களின் இலக்குகளாகி விடுகின்றன. இந்த இலக்குகளில் மகிழ்ச்சியும், அர்த்தமும், வெற்றியும் தேடும்போது பலருக்கும் ஏமாற்றமே மிஞ்சுகிறது.

உண்மையான மகிழ்ச்சி, அர்த்தம். வெற்றி இருக்கிறதா என்பதை அறிய ஒரு மனிதனின் தினசரி வாழ்க்கையைப் பார்ப்பது மிகச்சரியாக இருக்கும். காலத்தை மறந்து, செய்கின்ற வேலையில் ஐக்கியமாவது உண்டா? பெரிய செலவில்லாமல் இரசிக்கும் சின்னச்சின்ன விசயங்கள் உண்டா? அடுத்தவர் பார்வைக்கு எப்படி இருக்கிறது என்று கவலைப்படாமல் உங்களுக்குப் பிடித்திருக்கிறது என்பதற்காகவே ஈடுபடும் விசயங்கள் உண்டா? பெரும்பாலான நாட்களில் உற்சாகமாக எதிர்பார்க்கவும், செய்யவும் ஏதாவது புதுப்புது முயற்சிகள் உண்டா? இதில் ஓரிரண்டு கேள்விகளுக்காவது பதில் ஆம் என்று இருந்தால் உங்கள் வாழ்க்கை உயிரோட்டமுள்ள வாழ்க்கை. உங்கள் வாழ்க்கை அர்த்தத்தோடும், மகிழ்ச்சியாகவும், வெற்றிகரமாகவும் போய்க்கொண்டிருக்கிறது என்று பொருள்.



அதற்கு எதிர்மாறாக உங்கள் தினசரி வாழ்க்கை இருந்து வந்தால் உங்கள் வாழ்க்கையில் உயிரோட்டம் இல்லை என்று பொருள். கேளிக்கைகளில் ஈடுபட்டால்தான் மகிழ்ச்சி கிடைக்கிறதா? தினசரி குடித்தால்தான் நிம்மதி கிடைக்கிறதா? அடுத்தவர்களைப்பற்றி வம்பு பேசினால்தான் பொழுது போகிறதா? அடுத்தவருடன் ஒப்பிட்டுப் பார்த்து மிஞ்ச முனைவதில்தான் தினமும் அதிக நாட்டம் செல்கிறதா? பொருளாதார இலாபம் இல்லாவிட்டால் உங்களுக்கு மிக ஆர்வமுள்ளவற்றில்கூட கவனம் செலுத்த மறுக்கிறீர்களா? இதில் சிலவற்றுக்கு பதில் 'ஆம்' என்றால் உங்கள் வாழ்க்கையில் ஓட்டம் இருக்கலாம். ஆனால் உயிர் இல்லையென்று பொருள்.

உயிரோட்டமுள்ள வாழ்க்கைக்கு சில உதாரணங்களைப் பார்ப்போம். எடிசன், ஐன்ஸ்டீன் போன்ற விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சிகளில் மூழ்கிவிடும்போது உலகத்தையே மறந்துவிடுவார்களாம். கொண்டுவந்து வைக்கப்படும் உணவை உண்ணக்கூட மறந்துவிடுவது சகஜமாம். லியார்னாடோ டாவின்சி, மைக்கேல் ஏஞ்சலோ போன்ற ஓவிய மேதைகளும் அப்படியே தங்கள் படைப்பில் மூழ்கிவிடுவார்களாம். அப்படியேதான் எல்லாத்துறை மேதைகளையும் சொல்லலாம்.

அந்த நேரங்களில் செய்யும் வேலையின் சிரமங்களோ, வரப்போகும் இலாபங்களோ, கிடைக்கப்போகும் புகழோ அவர்கள் கவனத்தில் இல்லை. அந்தத் தருணங்கள் மிக அழகானவை. உயிரோட்டமுள்ளவை. செய்யும் செயல் முழுமை பெறப்பெற அவர்கள் அடையும் சந்தோஷம் வார்த்தைகளில் அடங்காதது. அதே நேரத்தில் அது அர்த்தமுள்ளதாகவும் அமைந்து வெற்றியையும் அளித்துவிடுகிறது. அந்த அளவு தனித்திறமை இல்லாவிட்டாலும் எத்தனையோ பேர் தங்கள் இயல்புக்கு ஏற்ப உயிரோட்டமான, உபயோகமான வாழ்க்கை வாழ்வதை நாம் பல இடங்களிலும் பார்க்கலாம்.

மனதுக்குப் பிடித்த வேலையாகவோ, தொழிலாகவோ அமையும் பாக்கியம் ஒரு சிலருக்கே வாய்க்கிறது. பலருக்கு அப்படி அமைவதில்லை. அமைகின்ற வேலை உற்சாகமில்லாதபோது பொழுது போக்கு ஒன்றையாவது உற்சாகமாகவோ, உபயோகமாகவோ வைத்துக்கொள்வது மிக புத்திசாலித்தனமான அணுகுமுறை. வருமானத்திற்கு ஒரு தொழிலும், மனதிற்குப் பிடித்ததாய் ஒரு நல்ல பொழுதுபோக்கும் அமைத்துக் கொண்டு உயிரோட்டமுள்ள வாழ்க்கை வாழ்பவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். வேலைக்குப்போகாத ஒரு குடும்பத் தலைவி, தோட்டவேலைகளில் மிகவும் ஈடுபாடுடையவர். நடும் செடிகளில் தளிர்க்கும் ஒவ்வொரு இலையிலும், பூக்கும் ஒவ்வொரு பூவிலும் ஆனந்தம் காணும் தன்மை அவரிடம் உண்டு. இன்னொரு மனிதர் புத்தகப்பிரியர். புத்தகம் ஒன்று கிடைத்துவிட்டால் உலகையே மறந்து அதில் ஆழ்ந்து விடுவார். அவருடைய வேலை இயந்திரத்தனமாக அமைந்திருந்தாலும், பிடித்த புத்தகங்களைப் படித்து வாழ்க்கையில் உற்சாகம் குன்றாமல் அவர் பார்த்துக் கொள்கின்றார். இப்படி பலர் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் பிடித்த ஒன்றில் ஆர்வமாக ஈடுபட்டு வாழ்க்கை இயந்திரத்தனமாக மாறிவிடாமல் பார்த்துக்கொள்கிறார்கள். சாதனை புரியவோ சரித்திரம் படைக்கவோ முடியாவிட்டாலும், வாழ்க்கை உயிரோட்டமாக இருக்கும்படி இப்படிப் பட்டவர்கள் பார்த்துக்கொள்கிறார்கள்.

இப்படி உயிரோட்டமான வாழ்க்கை வாழ்பவர்கள் பெரும்பாலும் உபயோகமான வாழ்க்கை வாழ்கிறார்கள். இல்லாவிட்டாலும்கூட மற்றவர்களுக்கு உபத்திரவமாக என்றும் மாறுவதில்லை. தங்கள் வாழ்க்கையில் தங்கள் வழியில் நிறைவு காண்பவர்கள். அடுத்தவர்கள் வாழ்க்கையில் அனாவசியமாகக் குறுக்கிடுவதில்லை. அடுத்தவர்களை நோகடிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்படும் இழப்புகளையும், துக்கங்களையும் சமாளித்து சீக்கிரமே மீண்டும் விடுகிறார்கள்.

உயிரோட்மில்லாத வாழ்க்கை வாழ்பவர்களோ அதிகமாக அடுத்தவர்களைப் பார்த்தே வாழ்கிறார்கள். பொருளாதார நிலையே மிக முக்கியம் என்று நம்பி சம்பாதிக்கும் முனைப்பில் தனிப்பட்ட இயல்பான திறமைகளையும், ஆர்வங்களையும் பலி கொடுத்து விடுகிறார்கள். பணம், பொருள், சொத்துக்களைச் சேர்த்துக்கொண்டே போகும் அவர்கள் வாழ்வில் முன்பு சொன்னதுபோல ஓட்டம் இருக்கிறது; உயிர் இருப்பதில்லை. ஒரு வெறுமை என்றும் இருந்துகொண்டே இருக்கிறது. அந்த வெறுமையை நிரப்ப சிலர் போதையை நாடுகிறார்கள், சிலர் கேளிக்கைகளில் அதிகம் ஈடுபடுகிறார்கள். சிலர் பதவி, அதிகாரம் தேடி அடைகிறார்கள். வெளிப்பார்வைக்கு அந்த வாழ்க்கை வெற்றியாகவும், மகிழ்ச்சியாகவும் தோன்றினாலும் நிரப்ப முடியாத வெறுமையாகவே அப்படிப்பட்ட வாழ்க்கை இருந்துவிடுவதுதான் சோகம்.

எனவே, உங்கள் வாழ்க்கையில் உயிரோட்டம் உள்ளதா என்பதைச் சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். மாற்றம் தேவையானால் மாற்றிக்கொள்ளுங்கள். அடுத்தவர் பார்வைக்கு வெற்றிகரமான வாழ்க்கையாய் தெரிந்து உள்ளுக்குள் வெறுமையை உணரும் வாழ்க்கையாக இருக்கும் அவலம் மட்டும் வேண்டவே வேண்டாம்.

■

"ஒரு பூண்டின் வாழ்வுக்கான முழு வளர்ச்சியின் பயனை, ஒரு சிறு புட்டி நன் மருந்து, நமக்கு வேண்டும்போது தரக் காத்திருக்கிறது. அதுபோல, ஒரு சிறந்த அறிஞனின் முழு வாழ்க்கையின் பயனை ஒரு நூல் நமக்கு வேண்டும் போது தரக் காத்துக்கொண்டிருக்கிறது" - மில்டன்




கலாபூஷணம் வயலற் ரோஜா

சீரிய சிந்தனையே சீரிய வாழ்க்கைக்கு வழிகோலும்: அதிகம் வாசிப்பதால் சீரிய சிந்தனை உருவாகும். அறிவிருந்தும், புத்தி இல்லாவிட்டால் பயன் ஏதுமில்லை. அதேபோன்று புத்தி இருந்தும், அறிவு வளராவிட்டால் நிறைவுமில்லை. எந்த ஒரு உபதேசமும் தீயவனை நல்லவனாக்கி விடுவதில்லை. பாலும் தேனும் கொண்டு நச்சுக் குணத்தை மாற்றமுடியாது.

தீயோர்கூட 'நல்லவர்கள்" என்ற முகமூடிக்குள் மறைந்திருந்தே நடிக்கிறார்கள். அவர்களை மிக மிக அவதானமாகவே அணுக வேண்டும். ஆனால், இறைவன் அழிக்க நினைத்த எப்பொருளையும், எவ்வுயிரையும் மனிதனாற் காக்க முடியாது. புயல், சுனாமி, பூகம்பம், எரிமலை, வெள்ளம் போன்றவற்றை உங்களால் தடுத்து நிறுத்த முடியாது. அவை நினைக்காத நேரத்தில் வந்து இறைவனது சித்தத்தை நிறைவேற்றி விடுகிறது. அவை எங்கே? எப்போது? எப்படி? எந்தளவு? ஏற்படும் என்று எவருக்கும் தெரியாது; புரியாது.

படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களை இறைவன் மட்டுமே செய்கிறார். இவற்றை மனிதன் ஒருபோதும் செய்ய முடியாது. ஒன்றுமில்லாத நிலையில் மனிதனால் எதையுமே சிறிஸ்டிக்க முடியாது. இறைவனுடைய படைப்பை எடுத்து மாற்றுருவம் கொடுக்க மட்டுமே முடியும். உதாரணமாக, உதாரணமாக, இறைவனுடைய படைப்பான மரத்தை வெட்டி பல்வேறு வடிவங்களில் தளபாடங்களைச் செய்கிறான். பல்வேறு கலவையால் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்கிறான். மனிதனுக்கு இறைவன் பூரண சுதந்திரத்தைக் கொடுத்துள்ளார். ஆனால், மனிதன் ஒன்றை மட்டும் சரியாக உணர வேண்டும், "சிலரைச் சில நேரங்களில் ஏமாற்றலாம். ஆயினும் எல்லோரையும் எல்லா நேரங்களிலும் ஏமாற்ற முடியாது. இங்கு விழிப்புணர்வு காத்துவிடுகிறது".

"நான் எதையும் சாதிக்க வல்லவன்" என்று சொல்: நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம் கூட சக்தியற்றதாகி விடும். இதயம் சுதந்திரமாகப் பறக்கும்போது ஆனந்தமும், அமைதியும், மகிழ்ச்சியும் இருக்கிறது. நல்லவராய் இருப்பது நல்லதுதான். ஆனால், நல்லது கெட்டது தெரியாதளவிற்கு நல்லவராய் இருப்பதென்பது ஆபத்தானது.

ஒவ்வொன்றுக்குமே தனி வழி உண்டு. வாழ்க்கையைப் புரிந்துகொள்வது கடினம்.

பஸ் கடலில் ஓடாது
படகு தரையில் ஓடாது.
தரையில் ஓடும் கார் வானிற் பறக்காது
வானிற் பறக்கும் விமானம்
வீதியில் ஓடாது.

இவைதான் அவற்றின் சிறப்புத் தன்மை, தகுதி, தராதரம் நான் யார்? எனது திறன், தன்மை எது?

தொடர் 10ம் பக்....



## கிறிஸ்தவம்

# மாணவர் பக்கம்

- நில்மினி கஜேந்திரன் -

க.பொ.த உயர்தரம்

**தற்கால சமூகத்தில் இலங்கைத் திருச்சபை தொடர்ச்சி :**

தற்காலத்தில் மறைபணியினை பல்வேறு தேசிய அமைப்புகள், இயக்கங்கள், தேசிய ஆணைக்குழுக்கள் போன்றவை ஆற்றி வருகின்றன. இவற்றை நோக்குகையில் தேசிய ஆணைக்குழுக்களினூடாக நீதி, அமைதி, மனித முன்னேற்றம், மறை அறிவிப்புப் பணி, கிறிஸ்தவ ஒன்றிப்பு உரையாடல், சமூகத் தொடர்புகள் போன்றவையும் தேசிய அமைப்புகளூடாய் – இலங்கைக் கத்தோலிக்கச் சங்கம், மரியாயின்சேனை, வின்சன் டி போல் சபை, சமூகப் பொருளாதார முன்னேற்ற நிலையம், தேசிய மறைக்கல்வி, விவிலிய மறைப்பணி நடுநிலையம் போன்றவையும் மறைமாவட்டங்களுக்கிடையான மறைபணி இயக்கங்களாய் கிறிஸ்தவ வாழ்வுச் சமூகம், இலங்கைத் தொழிலாளர் இயக்கம், வானொலி தொலைக்காட்சி மறைபணி, இலங்கை கிறிஸ்தவ குடும்ப இயக்கம் போன்றவைகளும் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை ஆயர் பேரவையானது இக்குழுக்கள் இயக்கங்களூடாய் மக்களுக்கு மாபெரும் பணியினை ஆற்றி வருவது யாவருமறிந்த விடயமாகும். உ+ம்: மறைக்கல்வி நடுநிலையத்தினை எடுத்துக்கொள்வோமானால் மறையாசிரியர்களுக்கான பயிற்சிகள் மறைக்கல்வி பாடநூல்கள் தயாரித்தல் மற்றும் பல மறைக்கல்வி வேதாகம நூல்கள் தயாரித்தல், வளர்ந்தோர் மறைக்கல்வித் திட்டங்கள், கருத்தரங்குகள், பாசறைகள், வேதாகம அறிவுப் போட்டிகள் போன்ற பல மறை பணிகளை ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று நம் நாட்டுத் தலைவர்கள், ஆயர்கள், துறவற சபைத் தலைவர்கள், பொதுநிலைத் தலைவர்கள், சுதேசிகள், நம் நாட்டு பிரஜைகள், நம் நாட்டுப் பண்பாட்டு விழுமியங்கள், கலாச்சாரங்கள், பழக்கவழக்கங்கள், நம் நாட்டு மக்களின் இதயத்துடிப்புகள், ஆசைகள், அபிலாசைகளை நன்கு உணர்ந்தவர்கள், நாட்டுப் பற்றுள்ளவர்களாய் நாட்டின் வளர்ச்சியில், அபிவிருத்தியில், முன்னேற்றத்தில் அக்கறையுள்ளவராய் இருப்பதுமன்றி தமது அறிவு, திறன், ஆற்றல்கள் அனைத்தையும் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகவும் சமூக வளர்ச்சிக்காகவும் அர்ப்பணித்து உழைத்து வருகின்றனர்.

மேலும் திருச்சபையானது நம் நாட்டு கல்வி, பண்பாடு, கலை, கலாச்சார, நாடக, எழுத்துக்கலை, கூத்துக்கலை, சமூக நலன்புரி இரக்கப் பணிகள் போன்ற பல துறைகளிலும் பங்களிப்புச் செய்து, மக்களின் முன்னேற்றத்தில் உழைத்து வருவதும் யாவரும் அறிந்த விடயமாகும். இத்துடன் சில துறைகளில் கிறிஸ்தவர்களே முன்னோடிகளாய்த் திகழ்கின்றார்கள். பாடசாலைகளும், கல்வி ஸ்தாபனங்களும் பறித்தெடுக்கப்பட்டாலும், கிறிஸ்தவ துறவிகள், கன்னியர்கள் பொதுநிலையினர் அரச பாடசாலைகளிலும் தனியார் பாடசாலைகளிலும் பணிபுரிந்து, கல்வித்துறையில் பெரும் பங்காற்றி வருகின்றனர். கிறிஸ்தவ மாணவர்கள் கிறிஸ்தவ சூழலில் கற்பதற்கும், கிறிஸ்தவ விழுமியங்களின்படி வளர்வதற்கும், ஒழுக்க நடத்தை விருத்திக்கும் தனியார் பாடசாலைகளையும், கல்வி நிறுவனங்களையும் நடாத்தி ஆங்கில வகுப்புக்கள், கணினி தொடர்பாடல் வகுப்புகள், தையல் அலங்கார வகுப்புகள், கைத்தொழில் பேட்டை போன்றவற்றை காலத்திற்கு காலம் நடாத்தி சமூகத்திற்கு பெரும் பங்காற்றி வருகிறது.

இன்று வத்திக்கான் சங்கத்தின் பிற்பாடு கத்தோலிக்க சபைக்கும் ஏனைய சபைகளுக்குமிடையே, பல பரஸ்பர உறவும் ஒற்றுமையும் நல்லுறவு உரையாடல்களும் மிக நெருக்கமாய் அமைந்துள்ளது. நாட்டுப் பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல்கள் பல கூட்டு முயற்சிகள் போன்றவற்றை திருச்சபை அனைவருடனும் இணைந்தே ஆற்றி வருகிறது.

மேலும் நம் நட்டில் 4 முக்கிய மதங்கள் இருக்கின்றன. இவை அனைத்தையும் ஒன்றிணைத்து ஐக்கிய இலங்கைக்குள் சமாதானத்தை கட்டி எழுப்புவதே திருச்சபையின் பாரிய பொறுப்பாய் அமைந்துள்ளது. இதற்காய் திருச்சபை தம் மத விடயங்களை, கோட்பாடுகளை, செயற்பாடுகளை பற்றிக் கலந்துரையாடுவதும் ஏனைய மதங்களிலுள்ள →



# நிச்சயமாய் வாழ்வுயரும் மீண்டும்!

- அருட்பாவலர் நிலா தமிழின்தாசன் -

நல்லோர்மேல் வீண் பழியை
நாளுமள்ளித் திணித்து விட்டுத் – தாம்
நல்லவராய் நடிக்கின்ற தீயர்
நாட்டினுக்கு உதவாத பேயர்

அள்ளியள்ளிச் சொரிந்தாலும்
அநியாயம் புரிந்தாலும் – வாழ்வில்
கள்ளமில்லா நன்மனத்தோர் கலங்கார்
கயவர்க்கு மரியாதை வழங்கார்

பசித்தோர்க்கு உணவளிக்கும்
பண்பிரக்கம் மறந்தவர்கள் – நாளும்
புசித்தள்ளித் தின்றே தம் வயிற்றை
புடைக்க வைக்கக் காட்டிடுவார் சிரத்தை

இயேசுவையே கும்பிடுவார் நடிப்பாய்
இதயமவர் கோயிலென்பார் துடிப்பாய் – ஆனால்
நயங்களையே தேடிடுவார் தினமும்
நன்மை செய்ய எண்ணார் தாம் கணமும்

தீயகுணம் தனை மாற்றியவர்
திருத்தமுடன் தாம் வாழவென – உண்மை
நேயசுதன் தனை வணங்க வேண்டும்
நிச்சயமாய் வாழ்வுயரும் மீண்டும்.

நல்ல விடயங்களை எடுத்துக்கொண்டு அறிவை வளர்ப்பதும் போன்றவற்றை தம் பணியாய்க் கொண்டுள்ளது. இதன்மூலம் அனைத்து மதங்களிடையேயும் சமாதானத்தை ஏற்படுத்தி, நல்லுறவை ஏற்படுத்த பல சமூக இயக்கங்களூ டாய்ச் செயற்படுகின்றது. சமயச் சமாதான, நடுநிலையம், தேசிய கிறிஸ்தவ சபை, சமூகப் பொருளாதார முன்னேற்றக் கழகம் போன்றவற்றினூடாக இனமத வேறுபாடின்றி உழைக்கிறது. மனித உரிமை, கல்வி, வறுமை, சூழல் பாடுடல், வீடின்மை, சமூக ஏற்றத்தாழ்வுகள் போன்ற வற்றிலும் திருச்சபையானது ஏனைய மதங்களுடன் சேர்ந்து சமூக முன்னேற்றத்தில் பெரும்பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும். ■

### சீரிய சிந்தனை.....

பஸ் கடலில் ஓட ஆசைப்படக் கூடாது. படகு தரையில் ஓட முயலக் கூடாது. தரையிலோடும் மோட்டார் சைக்கிள் வானிற் பறக்க முயலக் கூடாது. ஒவ்வொருவரும் தத்தமது தனித்து வத்தை இனங் காணவேண்டும். அதுவே முதல் வெற்றி. ■



## வாழ்த்துகின்றோம்!

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் தாண்டவன் வெளி பங்கினைச் சேர்ந்த கலைக்கோட்டன் அ. இருதயநாதன், நாவற்குடா சின்ன லூர்த்து அன்னை ஆலயப் பங்கினைச் சேர்ந்த திரு வாகரைவாணன் ஆகிய இருவரும் அண்மையில் இலங்கை அரசின் கிறிஸ்தவ கலாசார திணைக் களத்தினால் வழங்கப்பட்ட "தர்மபிரபாஸ்வர" தேசிய விருதினைப் பெற்றுக் கொண்டார்கள்.

பல துறைகளில் தங்களை ஈடுபடுத்தி, கலைத் துறைக்கும், எழுத்துத் துறைக்கும் அழியாமல், நின்று நிலைக்கும் பங்களிப்பைச் செய்து தமிழுக்கு பெருமை சேர்க்கும் இவர்கள் இருவருக்கும் முதன் முதலாக கத்தோலிக்க அமைச்சினால் வழங்கப்பட்ட விருது கிடைத் தமை இவர்களது பணிக்குக் கிடைத்த மாபெரும் கௌரவமாகும். இவர்களைத் "தொண்டன்" சஞ்சிகையும் வாழ்த்தி நிற்கின்றது.

# இலக்கியமாக்கல்

ஆழியோன்



நவம்பர் மாதம் இடம்பெற்றிருக்க வேண்டிய வரவு செலவுத் திட்டம் தற்போதுதான் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் நேரடியாகவும், மறைமுகமாகவும் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தொழிற்சங்கங் கள், பல்கலைக்கழக மாணவர்கள் என்போரின் போராட்டங்கள் பரவலாக இடம்பெற்று வருகின் றன. மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருகிறார்கள்: ராஜினாமா செய்யப்போவதாக நாடகமாடும் அரசியல் வியாபாரிகள் வெற்றிகரமான நடிகர்க ளாக காணப்படுகின்றார்கள். இவர்களைப் பார்த்து வளரும் இளம் பிள்ளைகள் எவ்வாறு நல்ல சமூகமாக வரப் போகின்றார்கள். உரிமை தருவோம் என் றார்கள்;




இப்போது மனிதப் படு கொலைகள் இடம் பெறவில்லை என்கின்றார்கள்: ஆரம்பத்தில் வரும்போது பூனைபோல் ஆட்சிபீடம் ஏறினார்கள்: இப்போது நரிபோல் மாறிவிட்டார்கள். நாம் நம்பி, நம்பி ஏமாறுபவர் களாகவே காணப்படுகின்றோம். பெரிய பெரிய தொகைகளாக போதைவஸ்துகள் பிடிபடுகின்றன. இவ்வளவுநாளும் அவற்றுக்கு என்ன நடந்தன?

தென்னிந்திய திரைப்படங்களைப் பார்த்து இவ்வாறு நடைபெறுகின்றதா? அல்லது இப்படி யானவர்களைப் பார்த்துத் திரைப்படங்களை இயக்குகின்றார்களா?

இங்கு, நான் குறிப்பிட விரும்புவது என்ன வென்றால், தற்போது நாட்டில் நடைபெறும் விடயங்கள் இலக்கியமாகப் பதியப்படல் வேண்டும். இலங்கையின் சுதந்திரம் பெற்ற வரலாறு, பண்டா-செல்வா ஒப்பந்தம், 83ன் ஆடிக் கலவரம் என்பன போன்ற விடயங்கள் வரலாறு, அரசியல் விஞ்ஞானம் படித்தவர்கட்கு மட்டுமே தெரியும். ஆனால், இவை நெடுங்கதை களாக, நாவல்களாக, திரைப்படங்களாக வெளிவந்தால் மட்டுமே காலங்காலமாக மக்கள் மனதில் நிலைத்து நிற்கும். “வீரபாண்டிய கட்டபொம்மன்” என்ற திரைப்படம் வந்ததனால்தான் அச்சரித்திர சம்பவம் அனைவரையும் சென்றடைந்தது.

ரூபவாஹினி வந்த ஆரம்பத்தில் 'The Root' என்று ஒரு தொலைக்காட்சித் தொடர் ஒளிபரப்பப்பட்டது. அதில் ஆபிரிக்க நாடுகளில் இருந்து கறுப்பர்கள், கம்புகளி னால் அமைக்கப்பட்ட கூடுகளில் அடைக்கப் பட்டு கப்பல்களில் ஏற்றப்பட்டு அமெரிக்கா கொண்டுசெல்லப்பட்ட சம்பவம், அதன்பின் இரண்டு, மூன்று பரம்பரைகளின் கதைகள் என்பன தொடராகக் காட்சிப்படுத்தப்பட்டன. மிகவும் அருமையாக இருந்தது.

எனவே இலக்கியமயப்படுத்தல் அவசியம்.


"நல்ல காரியங்களை நாமாகத் தேடிச் செய்ய வேண்டுமே தவிர, நல்ல காரியங்கள் தாமாக வந்து சேருவதில்லை" - கார்ஃபீல்டு

* * *

"உங்களுடைய துன்ப காலத்திலும், தேவை காலத்திலும் நீங்கள் பிரார்த்திக்கிறீர்கள். உங்களுடைய மகிழ்ச்சி நிறைந்து வழியும்போதும் வளம்மிக்க காலத்திலும்கூட நீங்கள் பிரார்த்திப்பீர்களானால், அது உங்களுக்கு மிகச் சிறந்த பயனை விளைவிக்கும்" - கலீல் கிப்ரான்

# அனல் வலியின் எண்ணங்கள்!

## 31ம் நாள் நினைவு



**அ. மரிய கிறிஸாந்துஸ் குமார் கொறேயிரா**
*(கொட்டியாரத்தான்)*

*மலர்வு : 15.09.1957*

*உதிர்வு : 15.02.2019*



**இல. 191, டொக்கியாட் வீதி,**
**திருகோணமலை.**
**தொ.பேசி : 0777044121 / 0768655505**
roshinton1995@gmail.com

வலிக்கின்ற நரம்பதிலே
அசைகின்ற செங்குருதி
அவர் அனு
அது கொண்டு
அனல் ஆன
என் எண்ணத்தை
பொறிக்கிறேன் இன்று
நான் இங்கு

வறுமையில் இளமை
இளமையின் இனிமை
கவிஞனின் காதல்
கொண்டது அம்(லி)மா
கிடைத்தது பரிசு
பெற்றுது மூன்று
அன்பு ஊன்ற
அறத்தினில் வளர்த்தார்

கடமையின் ஊழியன்
கறைபடா ஆதவன்
சோர்ந்த சுற்றம்
மூச்சில் மகிழ
நகைச்சுவை மணம்
எங்கும் பரப்பும்
இனியவன் இவர்
புன்னகை முகம்

அறுபதில் ஓய்ந்தார்
அறுபத்தொன்றில் மறைந்தார்
மாற்றியது எண்ணம்
மாறாத வயது
இளமை பதினாறு (61கஷ16)
தொண்டன் தொட்டு
திருமலைதீபம் வரை
இறுதிவரை ஓயாத

இளமை ஆறு
அலுவலகம் சொன்னது

சுற்றம் உறவு
ஆறுதல் சொல்லியும்
மாறா வடு
தன் மக்கள்
தாம் மகிழ

தான் அது
கண்டு மகிழஅதை நான்
கண்டு மகிழா
அஸ்தமித்த கணம்

இதுவரை ஓர்கனம்
இதுபோல் எழுதியதில்லை
வலிக்கின்ற நரம்பில்
கோர்த்துள்ளேன் வரிகளை
வாசிப்பவர் வாசிக்க
வலிக்கட்டும் நரம்பு
வலியில் பிறக்கட்டும்
நம்பிக்கை வாழ்வு
என் தந்தை
அறியாதவர் அறிவர்
இனி வரிகளில்

துயரில் பங்கேற்ற
துறவியர் அன்பர்
சுற்றம் உறவு
அறியா நல்லுள்ளம்
ஆத்ம சாந்திக்கு
மன்றாட வேண்டுகிறோம்
அனைவருக்கும் எங்கள்
இதயத்தின் நன்றிகள்.

**என்றும் அன்புடன்**
*கொட்டியாரத்தான் கடைக்குட்டி*
*ம.றொஷின்ரன் கொறேயிரா*

பிரிவால் வாடும் மலர்கள் !
**அன்பு மனைவி, மக்கள், உறவினர், அன்பர், நண்பர்கள்**




# கனவு காணுங்கள் வாழ்வினை வெல்லுங்கள்!

அருட்பணி **அ. அ. நவரெத்தினம் (நவாஜி)**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

இன்று உலகின் கவனத்தை ஈர்த்த சிறுவன் என்றால் அது இந்தியாவின் சென்னையைப் பிறப்பிடமாகக் கொண்ட பியானோ (Piano) வாத்தியக் கலைஞன் லிதியன் நாதஸ்வரம் ஆகுமென்றால் மிகையாகாது. அவரைப்பற்றி நாம் கொண்டாடுவதற்கு அப்படி என்னதான் அவன் சாதித்து விட்டான்? என்கின்ற கேள்வி நமக்குள் எழுவது இயல்புதான். அமெரிக்க ஐக்கிய நாட்டின் அமெரிக்க ஆங்கில மொழி தொலைக்காட்சி, வானொலி ஒளி பரப்பு வலையமைப்பினால் நடாத்தப்பட்ட 'உலக ஆற்றல்கள் நிகழ்ச்சியில் (CBS – The World's Talent Show) தென் கொரிய நாட்டின் 'குக்கிவொன்' (Kukkiwon) என்கின்ற கராத்தே மற்றும் ஜூடோ கலைகளின் விற்பன்னர்கள் குழவினருடன் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தனது பியானோ கலையால் மக்கள் தெரிவால் முதலிடத்தினைப் பெற்று 'The World's Best' (உலகத்தின் தலை சிறந்தவன்) என்கின்ற விருதினையும், பரிசுத் தொகையாக அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஒரு மில்லியன் டொலரினையும் (இந்திய மதிப்பில் 7 கோடி ரூபா) தனது 13வது வயதில் பெற்றுக் கொண்டான். உலகமே இன்று லிதியன் நாதஸ்வரத்தினை வாழ்த்துகின்றது. இவரைக் குறித்து வலையொளியில் (YouTube) நிறையக் காட்சிகளைக் காணலாம்.

இத்தனை பெருமைக்குமுரிய லிதியன் நாதஸ்வரம் யார்? லிதியன் நாதஸ்வரம் இந்தியாவின் தமிழ்நாட்டின் சென்னையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு தமிழர். இவரது தந்தையார் தமிழ் பின்னணி இசைக்கலைஞர் வர்ஸன் சதிஸ் ஆவார். அண்மையில் வெளிவந்த 'புறம்போக்கு எனும் பொதுவுடமை' எனும் தமிழ்த் திரைப்படத்திற்கு இசை அமைத்தவர். இசைஞானி இளையராஜாவின் அபிமானி. இவருக்கு அமிர்தவர்ஸினி என்கின்ற மகளும் உண்டு. இவர் மிகச்சிறந்த புல்லாங்குழல் (Flute) வாத்தியக் கலைஞராவார். லிதியன் தனது 23வது மாதத்தில் அதாவது 2 வயதினை எட்டுவதற்குள் டரம்ஸ் வாத்தியத்தினை இசைக்கத் தொடங்கிவிட்டான். அதுமட்டுமல்லாது தோல் வாத்தியக் கருவிகளாகிய தபேலா, மிருதங்கம் போன்றவற்றையும் நன்கு இசைக்கப் பழகிக் கொண்டான். தனது நான்காவது வயதிலே அவுஸ்ரேலியா, மலேசியா போன்ற நாடுகளில் டரம்ஸ் வாத்தியத்தை இசைத்துள்ளான். இவனது ஆரம்பகால இசை ஆசிரியரான அகஸ்ரின் போல் என்பவரின் கீழ் இசையைக் கற்றுள்ளான். அவனது ஒன்பதாவது வயதில்தான் அவனது நாட்டம் பியானோ வாத்தியத்தின்பால் ஈர்க்கப்பட்டது. அதுவும் ஒரு நிகழ்வில் இளம் சீனக் கலைஞன் பியானோ வாசிப்பதைப் பார்த்த லிதியன் தனது தந்தையிடம் தானும் பியானோ கற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுள்ளான். அப்போது அவனது தந்தை 'நீயொரு டரம்ஸ் கலைஞன், அவனொரு பியானோக் கலைஞன்.

வரும் நாட்களில் அவனுடன் இணைந்து நீயும் இசை மீட்டலாம்' என்று சொன்னார். ஆயினும் பியானோ மீதான அவனது நாட்டம் குறைந்த பாடில்லை. அவனது தந்தையும் பியானோவில் அவன் காட்டிய அசாத்தியத் திறமையினைக் கண்டு, அதிலே அவன் வளர்வதற்கு விட்டு விட்டார். இன்று தனது 13 வயதிற்குள் இலண்டன் திரித்துவ இசைக்கல்லூரியின் (Trinity Music Academy, London) தரம் எட்டு வரையிலான பரீட்சையிலும் திறமைச்சித்தி அடைந்து விட்டான். அதுமட்டுமல்லாது தற்போது பதினான்கு வாத்தியக் கருவிகளை மீட்டக்கூடிய திறமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளான்.

இன்று லிதியன் மிகச்சிறந்த பியானோ வாத்தியக் கலைஞன். பியானோவில் அவனது அசாத்தியத் திறமைகளாக ஒரே நேரத்தில் இரண்டு பியானோக்களை இசைப்பது, கண்க ளைக் கட்டியபடி இசைப்பது, உலகத்தரம் வாய்ந்த இசை ஆல்பங்களை மிகவும் சுலபமாக மீட்டுவது, வேகத்தை அதிகரித்து பியானோவை வாசிப்பது என்று அடுக்கிய வண்ணமே செல்ல லாம். எப்படி கண்களை கட்டிய வண்ணம் வாசிக்கின்றான் என்பதனை சொல்கின்றபோது அவனது தந்தை "ஒரு தடவை அவன் பியானோ இசைத்துக் கொண்டிருக்கும்போது துவாயினை தூக்கி அவன்மீது போட்டேன் அது அவனது முகத்தை மூடிக்கொண்டது. அவன் அதனையும் பொருட்படுத்தாது அப்படியே வாசித்துக் கொண்டிருந்தான்" என்கிறார். அதுவே ஆரம்பம். அவனால் முடியும் என்கின்றதை கட்டியம் கூறிய நிகழ்வும் அதுவே. இன்று அவனே தனது எட்டாவது வயதில் 'Best child drummer' (சிறந்த குழந்தை டரம்மர்) என்கின்ற விருதினையும், ஒன்பதாவது வயதில் 'Child Pianist' (குழந்தை பியானோ கலைஞன்) விருதினையும், இன்று உலகத்தின் மினி மாஸ்ரோ (Mini Maestro) விருதினையும் தனதாக்கிக் கொண்டுள்ளான். மறுபக்கத்தில் இவனது பெயரைக் குறித்தும் அவனது தந்தை பெருமை கொள்கின்றார். லிதியன் என்றால் மேலைத்தேய இசையிலுள்ள இராக அளவு முறைகளில் ஒன்றென்றும் அதுவே தமிழில் கல்யாணி இராகம் என அழைக்கப்படுவதாகவும் குறிப்பிடுகின்றார். நாதஸ்வரம் தென்னிந் திய இசைக்கருவிகளில் ஒன்றாகும். அதன் சிறப்பு யாதெனில் பெயரிலேயே நாதமும், சுரமும் இணைந்து காணப்படுவதாகும். இது வரைக்கும் என்ன படிக்கின்றான் என்று கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள். இரண்டாம் வகுப்பு வரை யும்தான் பாடசாலைக் கல்வியினை கற்றுள் ளான். அதன் பிற்பாடு பாடசாலைக் கல்விக்கு முழுக்கு போட்டுவிட்டு முழுநேர இசைக் கலைஞ னாகவே மாறிவிட்டான். அதுமட்டுமல்லாது தேவையானதை வீட்டிலிருந்தே கற்கிறான். லிதியனை உலகம் இன்று இளவயது மேதை (child prodigy) என்று கொண்டாடுகிறது. அத்தகைய அசாத்திய சாதனையை லிதியன் நாதஸ்வரத்தால் எவ்வாறு சாதிக்க முடிந்தது?

பிள்ளைகள் நன்கு தேர்ச்சி பெற்ற பிள்ளை களாக வளர வேண்டுமா? முதலில் வீட்டில் பிள்ளைகளுக்கு நல்ல பெற்றோர்கள் வாய்க்க வேண்டும். பிள்ளைகளின் ஆற்றலை இனம்கண்டு அவற்றிற்கு நீர்பாய்ச்சுகின்ற பெற்றோர்கள் வேண்டும். லிதியனுக்கு வர்ஸன், ஜான்சி என்கின்றவர்கள் வடிவில் அது வாய்த்தது. அவனது இசைப் பயணத்தில் அவனது தந்தை அவனுக்கு எப்போதும் பக்கபலமாக இருக் கின்றார். உங்களது குழந்தைகளிடத்தில் எது உள்ளதோ அல்லது எது அவர்களுக்கு இயல்பாக வருகின்றதோ அதை அடைய அவர்களுக்கு வழிகாட்டுங்கள், உதவி செய் யுங்கள். அடுத்தவர்களிடம் உள்ளதை உங்கள் குழந்தைகளிடம் எதிர்பார்க்காதீர்கள். வராத ஒன்றை அவர்கள்மீது கட்டாயப்படுத்தி திணிக் காதீர்கள். "பிள்ளைகளுக்காக நாளாந்தம் ஓடு கின்றோம்" என்று கூறுகிற பெற்றோர்களே சற்று நில்லுங்கள்! உங்கள் அவசரத்தில் உங்கள் பிள்ளைகளை விட்டுவிட்டே நீங்கள் ஓடுகின்றீர்கள் என்பதனை மறந்து விடாதீர்கள். பிள்ளைகளுக்கு நல்ல உணவு கொடுக்க வேண்டுமென்பது முக்கியம்தான், அதனிலும் முக்கியம் பிள்ளைகளுடன் உட்கார்ந்து உண்பது என்பதாகும்.' எனவே பெற்றோரே உங்கள் பிள்ளைகளுக்கு நேரம் கொடுங்கள். அவர் களுடன் உட்காருங்கள். அவர்களுடன் பேசுங்கள். அவர்களின் உள்ளக் கிடக்கைகளை அறிய முற்படுங்கள், முன்வாருங்கள்.

உலகப்புகழ் விஞ்ஞானி டாக்டர் A. J. P. அப்துல் கலாம் இளைஞர்களை 'கனவு காணுங்கள்'

என அழைப்பு விடுக்கின்றார். பலதரப்பட்ட கனவுகளுடன் வாழ்பவர்கள்தான் இன்றைய குழந்தைகள், சிறார்கள். லிதியனின் தற்போதைய கனவு என்ன தெரியுமா? கேட்டால் அசந்து போவீர்கள்: 'எனது பியானோவுடன் நிலவுலகிற்கு சென்று (moon) உலக இசைமேதை பீத்தோவனின் 'மூன்லைட் சொனாட்டா'வினை (Beethoven – Moonlight Sonata) வாசிக்க வேண்டும்' என்பதாகும். அன்பின் மகிழ்வு எனும் திருத்தூது ஊக்கவுரையில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவது யாதெனில் "பெற்றோர்களுக்கு தங்களது குழந்தையைக் குறித்து கனவு இருக்க வேண்டும். 'கனவுகள் இன்றி ஒரு குடும்பத்தை அமைக்க இயலாது. கனவு காணும் ஆற்றலை ஒரு குடும்பம் இழக்கும்போது அங்கே குழந்தைகள் வளர்வதில்லை, அன்பு வளர்வதில்லை, வாழ்வு நலிவுற்று, இறப்பைத்




| | |
|---|---|
| கரியாகி அழிகிறது | சிரியா |
| கண்மூடிக் குண்டுமழை | சொரிவார் |
| எரிதழலுள் மழலையரும் | |
| ஏங்கியழும் பெண்களொடுமுதியோர் | |
| சரிந்தழியும் மா கொடுமை | சரியா? |

தழுவுகின்றது" என்கிறார். (அன்பின் மகிழ்வு, எண். 169). இன்றைய நமது குழந்தைகள், சிறார்களுக்கு தேவையெல்லாம் நல்ல அப்பாக்கள்தான். அப்பாக்கள் 'தம் பிள்ளைகள் விளையாடும்போதும்... அச்சப்படும்போதும், வழிமாறிப்போகும்போதும் சரியான பாதைக்கு திரும்பும்போதும் அவர்கள் அவர்களுடன் உடனிருக்க வேண்டும்... குழந்தைகள் பிரச்சினைகளோடு தங்கள் வீடு திரும்பும்போது தங்களுக்காகக் காத்திருக்கும் ஒரு தந்தையைக் காண்பது அவசியம்' (அன்பின் மகிழ்வு, எண். 177). உங்கள் வீட்டிற்குள்ளும் பல மேதைகள், ஞானிகள் வாழ்கின்றார்கள். அவர்களை இனம்காண அவர்களுடன் பயணியுங்கள். உங்கள் உடனிருப்பால் அவர்கள் வாழ்வினை வளப்படுத்துங்கள். ■

## சின்ன விஷயங்கள் சிறந்த வாழ்க்கை

**புரியாத புதிர் ...**

கல்லூரியில் கணித வகுப்பு. உலகின் பெரிய கணித மேதைகளால் தீர்க்க முடியாத இரண்டு கணக்குகளை பலகையில் எழுதிய ஆசிரியர், அவை இன்றும் புரியாத புதிர் என்றார். சற்று தாமதமாய் அந்த மாணவன் வந்தான். அதற்குள் வகுப்பு முடிந்திருந்தது. அந்தக் கணக்குகளை வீட்டுப் பாடங்கள் என்று நினைத்து குறித்துக்கொண்டு போனான். மறுநாள் விடையுடன் வந்தான். அந்த சம்பவத்தாலேயே உலகப் புகழ் பெற்ற அந்த மாணவன்தான் ஜார்ஜ் டாந்த்ஸிக். அந்த சம்பவத்துக்கு அவர் தந்த விளக்கம், 'அது யாராலும் முடியாது என்று எனக்குத் தெரியும். எனவே என்னால் முடிந்தது.

**வெற்றிக்குக் காரணம் :**

பல சிக்கலான பரிசோதனைகளைச் சுலபமாகச் செய்து பலதும் கண்டுபிடித்த விஞ்ஞானி அவர். 'என் வெற்றிக்குக் காரணம் என் அம்மாதான்" என்றார். "சிறு வயதில் பாலைக்கொட்டி விட்டால் அம்மா திட்ட மாட்டார். அதில் விளையாட அனுமதிப்பார். அதன் பிறகு அந்த இடத்தைச் சுத்தம் செய்யச் சொல்வார். அவரும் உதவுவார். தவறுகளால் குற்ற உணர்ச்சி ஏற்படாமல் பார்த்துக் கொள்வார். எனவே, தவறுகளைத் தாண்டி ஆய்வு செய்யும் அறிவு வளர்ந்தது" என்றார். பிள்ளைகள் செய்யும் தவறுகளும் அவர்களைத் தகுதிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களே!

- ஜெ.பி.இரத்தினராஜா -


"நிச்சயமாக உன் செல்வத்தால் மட்டுமே மக்களுக்கு நீ உதவி செய்ய முடியாது. எனவே புன்னகையுடனும் நற்பண்புடனும் அவர்களுக்கு நீ உதவி செய்"

*- நபிகள் நாயகம்*

# அமாவாசை அஸ்தமித்தது...!

தொடர் - 4

... அங்கால அசிசு முதலாளி சோடா மில்லால புது வருடம் பொறந்ததும் இலவசமாய் சோடா கொடுத்துடுவாரு. ஆரம்ப மணி அடிக்க எல்லோரும் சென்றனர். வயசுகள் விடிஞ்சு பூசைக்காக வீட்டு காவலுக்கு கிடப்பர். கத்தர் பிறந்தாரே! கசிப்புப் போத்தலைத் திறந்தாரே! பாடலாய் போகும். 'புதுவருட பிறப்புக்கான' பூசை வழிபாடுகள் ஏற்பாடாகிவிட்டது. கடற் படை முகாமிலிருந்து 21 பீரங்கி வேட்டுக்களும், டச்சுக்காரண்ட கோட்டையிலுமிருந்து 21 பீரங்கி வெடிகளும் வெடித்தன. புதுவருடம் பிறந்து விட்டது எல்லாப் பக்கமும் வெடிகள் தான். அப்போதுதான்



அ. குமார் கொறேயிரா

இரணை சொன்னதும் ஞாபகத்துக்கு வந்தது. அல்போன்சுக்கும் மோசேஸ் வானவரின் கடையில் பட்டாசுகள் வாங்கிவிட்டு, அவரும், பெருநாள் தோத்திரம் சொல்லிவிட்டு, கொடுத்ததை அடிச்சுக் கொண்டு வரும் வழியில் பனையடியை, ஊடறுக்க இலுப்பையடி சந்தியில், விசையாக வந்த உழவு இயந்திரம், லோறன்ஸ்சைத் தட்டிவிட்டு ஓடி மறைந்தனர். பிரசங்கம் கேட்க விரும்பாத உள்ளங்கள், தொட்டப்பாவுக்கு புதுவருடத் தோத்திரம் சொல்லி ஒரு அடி, அடிக்க வந்தவர்கள்தான் இவனைக் கண்டு வைத்தியசாலைக்கு கொண்டு சேர்த்தனர். பெருநாள் என்றும் பாராமல், கடமையிலும் காத்திரத்துடன் இருந்தார்கள் ஐயாமார்கள், டாக்குத்தர் இருதயநாதனும் செல்லத்துரை டாக்குத்தரும், சௌந்தரராஜா டாக்குத்தரும், உதவிக்கு இருதயமேரி அம்மா வும். 'வணக்க மாதங்களில்" பக்தர்களின் கைகளில் வண்ண வண்ணமாகவும், தங்க மாலையாகவும் உருண்டு வருபவருமான வரும் உதவியாளனாகவும், பெருநாளும்தானே! புத்துயிர் ஊட்டி புதுப்பொலிவோடு நின்றார். மீசையும் கூடச் சிரிக்கிறதுதான். சொன்னார் மாமனார் "பெருநாள் சனங்களுள் இங்கு வந்து அடங்கிறப் போதுகள். நீங்கள் போய் மெயின் கேற் றைப் பூட்டி நாளைக்கு வாங்கள் என்று சொல்லியனுப்பிவிடுங்கள். இல் லாட்டி இந்த மூன்று பாதர்மாரும் இங்கு வந்து, அடங்கி விடுவார்கள்". அல்போன்ஸி யாவும், திண்ணையில் கிடந்து இரு கொள்ளிவாய் எறும்பானாள். யாரா வது படலைக் கதவைத் திறப்பார் களா? என்ற ஏக்கத்தோடு, வழி மீது விழிவைத்துக் காத்துக் கொண்டு கிடந்தாள். றெஜினாப் பெத்தாட முற்றத்தில நின்ற நாவ லில் இருந்து பாணிச் சாவல் கூவுகின்றது. கதிரவனின் வரவும், கறவையினம், பறவை யினமும் இருந்து பாஞ்சான் அனுமான் இலங்கையைச் சுட்டான். அனுமானையும் கூவி எழுப்பியது. ரோஷா அக்காவும் "ஐந்து மணியடிக்க, திரிகாலைச் செபமும் சொல்லப்படுகின்றது". அருமை மாமா

வும், செல்லராசா மைத்துணனும். படலையடியில் நின்று "பிள்ள வாங்க போவோம்". அவளும் அவதிப்பட்டுக்கொண்டு செருப்பை மாட்டி நடக்கலானாள். அதுவும் அறுந்து போகிறது. அதை உதறிவிட்டு படலையைத் தலைக்கு மேலால் தூக்கினாள். அதிலிருந்து கிக்கிலிப் பறவையும் கத்துகிறது. எதிர்கொண்டது ஏன்! என்றால் போல சவப்பெட்டி அடிக்கிற பறண்டி சிங்கமேனும், மகனும் நெல்சண் மண்டேலாவும், "நாங்களும் அங்குதான் போகிறோம்" என்றனர். போறணச் சந்திக்கு போயிருப்போம், தெரு நாயும் ஊளையிடுகிறது. இளைப்பாற்றியும் அடிக்கின்றது. அதோடு அவளும் உணர்ந்து கொண்டாள். ஆசுபத்திரிக்குள் ஏறியதும் அனேக மான உறவினர்கள் கண்டு, "பிள்ளை நீங்க போங்க, நாங்க கொண்டுவருகிறோம்" என்றனர். திரும்பி வரும் வழியில் தொழுகை முடிந்து வந்தவர்கள் R.D.O நிஷார் ஹாஷியாரும், இரும்புக் கடை முதலாளி ஜவாகீர் ஹாசியாரும், மக்கள் வங்கி முகாமையாளரான ஜனாப் சலீம் இவர்களும் கண்டு "என்ன கோயில்ல மணி அடிச்சாங்களே! யார் இறந்த?" என்று கேட்க, "இவட புருசன்தான் செருப்புக் குத்தி லோறன்ஸ்". அவர்களது தெய்வத்தை வேண்டி, ஏதோ வாய்க்குள் சொல்லிக்கொண்டு, "காலை உணவு அனுப்புவோம். இரண்டுபேர அனுப்புங்க. பலகையும், ஆணியும் இலகிரியண்ணர் தருவார் வாங்குங்க" என்றார்கள். இந்த முஸ்லீம் மக்க ளுக்கே தெரியுது நம்மட 'கோயில் மணியின் வித்தியாசம்' இவர்களுக்கும் விளங்குதே!

ஒரு மரண வீட்டில் எப்படி ஆயத்தம் செய்ய வேண்டுமோ, அவர்களுக்கு கொடுத்த வேலைகள் என்னுமாப்போல செயற்பட்டிருந்தார்கள். இந்த அப்பாவின் அன்புத் தொல்லையால் அடிமை யானார்கள். மூன்று பாதர்மாரும் வர, பிரேத மும் கொண்டுவந்துவிட்டார்கள். வெள்ளை விரிப்பான வாங்கின் மேல், வைத்தார்கள். பாதர்மாரும் ஆசீர்வதித்துச் சென்றார்கள். தலையில் அடித் துக்கொண்டு, "ஐயா! அப்பா, புதுவருடம் அமாவாசையில பொறக்குது என்றாளே! இரணை வினோதா! வாழ்க்கையே இருண்டு போச்சுதடியம்மா! அமாவாசையும் அஸ்தமித்து விட்டதடி. வாழ்க்கையும் அஸ்தமித்துவிட்டதடி. அப்பா பாரப்பா!" தலைசுற்றி பிரேதத்துக்கு மேல் விழுகின்றான் அப்பையாவின் மகன் அந்தோனி டாக்குத்தரும் கண்டு, "அப்படியே தூக்குங்க. திண்ணையில வளர்த்தி தலையை உயர்த்தி வையுங்கள். காற்றாட விசுக்குங்கள். சூடா கோப்பி கொடுங்கள்". "ரெஜினோட் வீட்ட ஓடிபபோய் ஞானத்திட்ட, மோபியா போத்தலையும், குடிக்கிற சேலேன் என்று கேட்டு வாங்கிட்டு, ஓடி வா" அப்படியே! கை ஜாடையாகக் காட்டுகிறார். திரிறோஸ் பெட்டிக்கும் இதை இரணை கண்டுகொண்டாள். "டாக்குத்தர் மாமாவும், 'நோவா விட்ட காகமாட்டம்' றோயல் பெமிலியை அனுப்பியிருக்காரு, அது இப்ப அப்பாட துக்க அடி, அடிச்சு, அம்மாவும் எழும்பின பிறகும் வருமா? என்று பாருங்கள்". நின்றவர்க ளுக்கெல்லாம், சிரிப்புத்தான் 'சாடிக்கு மூடி வாச்சுத்தான் இருக்கு' சட்டத்துக்கும் பேத்தி பொறந்துதான் இருக்கு. இரணையை மாமிக்காறி இழுத்துப் போகிறாள்.

ஆச்சுப் பெத்தா மாரடிச்சு ஒப்பாரி வைக்குறா.

"கல்விக் களஞ்சியமே!
காசளஞ்ச .... பெட்டகமே!
உதிரத்தை பாலாய் உறிஞ்சினாயடா!
உன் தந்தையிடம் அறிவைப் பெற்றாயடா!
கையில் வைத்துக் காத்தனரே!
காலடியிலே காத்து நிற்பாயெண்ண
ஏமாற்றினாயடா எம்மையெல்லாம்
ஏரோதுவும் தேடிய பாலனிடமே
அடைக்கலமானாயடா!"

விக்கிரமாதித்தன் உடலைத் தோள்மீது சுமந்து செல்லுகையிலே! அதனுள்ளிருந்த வேதாளம் எள்ளி நகைத்து மன்னா இவ்வளவு நேரமும், காலமும், கதையைக் கேட்டாய்தானே! சலிப்பின்றி, இதற்கு நீ விடை தெரிந்தும், பதில் கூறாது போனால் உன் தலை வெடித்து சுக்கு நூறாகிவிடுமென்று மிரட்டியது. மன்னனும் வாய் திறந்து 'ஒரு தனி மனிதனின் விடாமுயற் சியும், தன்நம்பிக்கையும், அவனது துணிவுமே' ஒருவனின் வாழ்க்கையின் வெற்றிக் கனிகள். மன்னனது மௌனம் கலையவே, வேதாளம் உயரக் கிழம்பி மீண்டும் முருக்கமரம் ஏறிக் கொண்டது.

**நிறைவுற்றது ......**

**"நண்பர்களிடம் மட்டுமின்றி, பகைவனிடமும் நேசம் கொள். நீ நடக்கும் வழியில் முள்ளைப் போடுபவன் முன் நீ பூவை வை"**

– இயேசு

# ஓராண்டு நினைவஞ்சலி

"நேர்மையாளர் தீமையின் முன்னின்று எடுத்துக் கொள்ளப்படுகின்றனர்;
அவர்கள் அமைதிக்குள் சென்றடைகின்றனர்."

(ஏசாயா 57:1-2)

**பிறப்பு**

*15 ✸ 08 ✸ 1940*



**இறப்பு**

*28 ✸ 04 ✸ 2018*

## அமரர். திருமதி. இராஜேஸ்வரி ராஜையா லியோன்

(மலர்)

அன்பினால் எம்மை ஆண்டு
பாசத்தை உணவாய் ஊட்டியவளே - அம்மா
உம் அன்பு தேடி வாடுதே
எங்கள் உள்ளம்
நீ சென்று ஓராண்டு நொடி போல்
மறைந்தாலும் நீ காட்டிய அன்பு
எம்மை விட்டு நீங்காது உங்களின்
பாதம் தொட்டு பூக்களால் பூஜை
செய்கின்றோம்

**பிள்ளைகள், மருமக்கள்,**
**மருமகன், பேரப்பிள்ளைகள்**

*33/12*, 5ம் குறுக்கு,
இருதயபுரம் மேற்கு,
மட்டக்களப்பு.
தொ.பே: *065 2224099*




மண் வளமும், மனித மாண்பும் தவமும் மீனகத்திலே
பண்பும், பாரம்பரியமும் உலவும் தேனகத்திலே
விண்ணும், முகிலும் விளையாடும் வானகத்திலே
எண்ணற்ற இதயங்களின் ஆழமான மனத்தினிலே
தண்ணென்ற ஒளிக்கீற்றைத் தோற்றுவித்த அகவை ஐம்பதிலே
தொண்டுகள் புரிந்திட பலரை உருவாக்கிய தொண்டனே!

அரவணைப்பின்பால் அனைத்து மாந்தரையும்
கரம்கொடுத்துக் காப்பாற்றிய எழுத்தாக்கமும்
தரமென்று புரிந்ததுவே தக்க பல வித்தகர்களால்
பரம்பொருளே பாவிகளை மீட்ட வரலாறு முதல்
சிரம் தாழ்த்தி வணங்கிட சீரிய அருட்பணியாளர்களும்
வரமாய் வழிநடாத்திய மறை உலக தொண்டனே!

நெய்தல் நிலமாய்த் திகழ்ந்திட்ட கிழக்கினிலே
புயல் வந்து பொதுச் சொத்தையெல்லாம் அழித்த வேளையிலும்
செல் வீச்சுகளினால் சீரழிந்து போனபோதிலும்
இயல்பு வாழ்க்கைக்கு திருப்பியே உன் பணியால் மக்களை
கல்விக் கூடங்கள் கூட அகதிமுகாம்களானாலும்
'நில்' என்று நிமிர்ந்து நிலைகுலையாமல் காத்த தொண்டனே!

பாதி நூற்றாண்டுக்குள் பாதிப்புகள் பல வந்தபோதும்
மீதிக் காலமெல்லாம் மெருகூற்றிய உன் படைப்புகள்
வீதிகள் தோறும் விறுவிறுப்பாய் போற்றப்பட்டதாலேயே
மேதினியில நீயொரு மேன்மையின் வெளிப்பாடாய்
போதிக்கின்றாயே பலவிதமான பண்பான ஆக்கங்களையே
சாதிக்கப் பிறந்த உன் பணியில் சமத்துவம் காணலாம் தொண்டனே!

## வினா விடைப் போட்டி - இல 11

### சரியான விடைகள்

1. ரோஜா மலர் கிரீடம்
2. இஸபெல் எபரோன்
3. 450 அடி
4. உடல் உறுப்புகள் : இதயம், கண், நுரையீரல், கிட்னி, தோல் என்பன.
5. Maria Fernanda BSPinosa Garces
6. 1. ஹடாசா மெடிக்கல் சென்ரர்
   2. ஹீப்ரூ பல்கலைக்கழகம்
7. Fiamme Gialle எனப்படும் விளையாட்டுக் குழு Castel Porziano விலுள்ள விளையாட்டு மையத்தில்.
8. சுவாமி விபுலானந்தர்
9. அமைதிக்காகவே பணியாற்றுவதே நல்லதோர் அரசியல்.
10. லூக்கா 6:38

**சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:**

K. மேரி மெக்டலின்,
வள்ளுவர் குறுக்கு வீதி,
கனக நகர், தம்பிலுவில் - 01,
தம்பிலுவில்.

S. லிகாஷிகா,
32, புதிய எல்லை வீதி,
இருதயபுரம் மேற்கு.

S. சகானா,
38/4, 3ம் குறுக்குத் தெரு,
மட்டக்களப்பு.




# எனக்கு என்ன செய்தாய்?

ரஜனி ஈஸ்வரன்

நாம் ஏழையானாலும் செல்வந்தரானாலும் ஏதோ ஒருவகையில் பிறருக்கு கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். இக்கொடுத்தல் சரியானதா?

கூலித்தொழில் செய்வோர் குண்டுமணியளவாவது சேர்க்கின்றனர், அரச தொழில் செய்வோர் அதிகமாகச் சேர்க்கின்றனர். தொழில் அதிபர்களோ அளவிற்கு மீறி சேர்க்கின்றனர். ஆம் மனிதராகிய நாம் பணம் பொருள் நகை யென அனைத்தையும் ஆசையோடு சேர்த்துக்கொண்டே செல்கின்றோம். அப்படியானால் நாம் யாருக்கு உதவி செய்கின்றோம்? எதைச் செய்கின்றோம்? எப்படிச் செய்கின்றோம்?

நாம் வாழும்போதே ஏழைகளுக்குத் தேவையானவற்றை தேவை ஏற்படும் நேரத்தில் கொடுப்பதில் எமக்கு எந்தக் குறைவும் வந்துவிடாது. நாம் இறந்த பின் இறைவன் எம்மிடம் என்ன கேட்பார் தெரியுமா? ஆலயத்திற்கு அள்ளி அள்ளிக் கொடுத்தாய் எனக்கென்ன செய்தாய்? இருப்பவருக்குப் புகழ்ச்சிக்காக மேலதிகமாய்க் கொடுத்தாய், இல்லாதிருந்த எனக்கென்ன தந்தாய்? இறந்த பின்னர் எட்டாவது நாள், முப்பத்தோராவது நாள் என்று ஆயிரம் பேருக்கு புரியாணி கொடுத்தாய், இறக்கும் தருணத்தில் இருந்த எனக்கு என்ன செய்தாய்? கல்லறைக்கு மாபிள் பதித்து வர்ணம் தீட்டினாய். ஓட்டைக் குடிலில் ஒழுக்கில், புழுதியில் கிடந்த எனக்கு என்ன செய்தாய்? மூலை வேலை செய்யாது ஹோமா வில் கிடந்தபோது புரோட்டினெக்சும், விட்டமினும் மேசையில் வைத்தாய். பசியால் துடித்த போது பாண் துண்டையேனும் தந்தாயா? போற வார வழியில் பிள்ளையைத் தூக்கிய வண்ணம் அன்னை நின்று பிச்சை கேட்டபோது கண்டும் காணாது போல் சென்றாயே ஏன்? வயோதிப வடிவில் உன் வாசலை தட்டினேனே, சில்லறையில்லை பிறகு வா என்றாயே! கிழிந்தவுடையில் வந்து உடு துணி கேட்டேனே கிழிந்த பழைய ஆடையைத் தந்தாயே! ஏன்? ஏன்? ஏன்?" என்று ஆண்டவர் உன்னிடம் கேட்கும்போது நீ கூறும் பதில் என்ன? "எப்போது ஆண்டவரே என்னிடம் நீர் வந்தீர்? எப்போது ஆண்டவரே நீர் நின்றீர்?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்கப் போகிறாயா? கொஞ்சம் சிந்தி! பிடிக்காத பொருளை நீ எடுப்பாயா? கெட்ட உணவை நீ உண்பாயா? கிழிந்த பழைய ஆடையை நீ உடுத்துவாயா? இல்லை. ஆகவே, உனக்கு மிகப் மிகப் பிடித்த ஆடையை, பொருட்களை, உணவை இல்லாதவருக்குப் பகிர்ந்து கொடு. வயோதிபர், நோயாளிக ளுடன் இன்முகத்துடன் பேசி, அவ்வப்போது அவர்களுக்கு எது தேவையோ அதைக் கொடு. 100 சீமெந்து பைகளை ஆலயத்திற்கு கொடுப்பதை விட 1 சீமெந்துப் பையையாவது ஏழை குடிசைக்கு தரை அமைக்கக் கொடு. நீ உன்னை அழகுபடுத்த எவ்வளவு பொருட்களை உபயோகிக்கின்றாய். அதில் ஒன்றை ஏழை வாலிப பிள்ளைக் குக் கொடுத்துப் பார் உன் அழகு கூடும். உன்னிடம் பணமோ, பொருளோ இல்லையா? உன்னிடமுள்ள அன்பு, பாசம், சிரிப்பு, கல்வி, நன்றி, மன்னிப்பு, நகைச்சுவை, நற்சிந்தனை, நல்லொழுக்கம், கருணை, இரக்கம், ஆறுதல், இனிய பேச்சு இவற்றைப் பிறருடன் பகிர்ந்து வாழ், இவை பல் மடங்காய்



# காலம் நல்ல மருந்து

### கடுகுக் கதை - 97

அன்ரன் தன் நண்பர்களுடன் "வாவிக்கரைப் பூங்கா" வில் அமர்ந்து கதைத்துக்கொண்டிருந்தார்.

தணிக்காசலம் "என்ர இளையவன், பெரிய பிரச்சினையானவன் இல்லை யெண்டாலும் கொஞ்சம் சொல்வழி கேக்கிறானில்ல .... படிக்க கள்ளப்படுகி றான்......" என்று சொன்னார்.

"ஏன் அப்பிடியிருக்கிறான்....?" என்று அன்ரன் கேட்டார்.

"சின்ன வயசில இருந்து செல்லம் கொடுத்திட்டம் .... கன காலத்திற்குப் பிறகு பிறந்தவன் .... வருத்தம் வந்து சாகக் கிடந்தவன் ..... அடிச்சு வளக்கல்ல ..... அதுதான் நான் செய்த பிழ ...." என்று பெருமூச்சுவிட்டார் தணிகாசலம்.

"பிள்ளைகளக் கண்டிக்கவும் வேணும்தான்; தண்டிக்கவும் வேணும்தான். அதற்காக அடிக்கத்தான் வேண்டும் எண்டில்ல... தணி! .... நல்லா அன்பா புத்தி சொல்லிப் பாருங்க .... அவன் திருந்து வான்...." என்றார் அன்ரன்.

"என்ன செய்யிற .... நான் கண்டிச்சு புத்திமதி சொன்னா மனிசிக்கு கோபம் பத்திகிட்டு வருகுது .... மகனுக்கு முன்னாலேயே என்னுடன் வாக்குவாதப்படுவாள்..... அது அவனுக்கு வாசியாய்ப் போயித்து..... இப்ப தாயும் துக்கப்படுகிறாள்....." தணி சொன்னார்.

"சில அம்மாமார் இப்பிடித்தான்..... அது அவங்கட பாசம் .... நாம வளர்ந்த காலம் வேற .... நம்மட பிள்ளைங்க வளர்ர காலம் வேற ..... விட்டுப்பிடிச்சுதான் போகணும் ..... கடும் முறுக்கு தெறிக்கும் என்று சொல்வார்கள். .... நீங்க கவலப்படாதீங்க .... காலம் நல்ல மருந்து: அது நல்ல பதில் சொல்லும்" என்று தணிகாசலத்தில் முதுகில் தட்டி விட்டார் அன்ரன்.

- பற்றி

உனக்கு
கிடைக்கும்.

இவற்றை நீ ஈதல் செய்வதால் உனக் கென்ன குறைவு? அடுத்தவர் தேவைக்காக உன் நேரத்தை செலவு செய்து செபித்துப் பார். உன் தேவை நிறைவேறும்.

ஒரு ஏழை உயிர்வாழத் தேவையான உணவையோ உறைவிடத்தையோ மறுப்போமானால் அது மிகக் கொடூர மானதாகும். இயலுமான போதும் இலகுவான போதும் உதவிடுவது மட்டுமல்லாமல் பரித்தியாகம் செய்து உதவி தேவைப்படுவோர்க்கு உதவுவதே மிக மிக முக்கியமானதாகும் கட்டாயமானதாகும்.

ஓர் ஆன்மாவின் அழுகுரல் இதோ!

"நான் இருக்கும்போது என் திருமண நாளுக்கோ அல்லது என் பிறந்த நாளுக்கோ ஓர் ரோஜாப் பூவையோ, ஏன் ஓர் காகிதப் பூவையோ எனக்குத் தராத என் குடும்பத்தினர், உறவினர் நான் இறந்தபின் என் உடல் மீதும், என் கல்லறை மீதும் ரோஜாப்பூக்கள் நிறைந்த மாலைகளால் அழகுபடுத்தியிருக்கிறார்களே. நான் உயிரு டன் இருக்கும்போது இவற்றை தந்திருந்தால் எவ்வளவு சந்தோசப்பட்டிருப்பேன். ஏன் இன்னும் சிறிது காலம் வாழ்ந்தும்கூட இருப்பேனே" என்றதாம்.

ஆம் வாழும்போதே பிறரை வாழ்த்துவோம்
வாழும் போதே ஈதல் செய்வோம்
சாகும் போதோ உடலுறுப்பை தானம் செய்வோம்.



# மரியாள் இணைந்த சிலுவைப்பாதை

அ. ஃலோரன்ஸ்

அன்று அதிகாலை வெள்ளிக்கிழமை வழமைபோல் மரியாள் விடியற்காலை விழித்தெழுந்து இறைமன்றாட்டுக்காக பரபரப்பாய் ஆயத்தப்படுத்துகிறாள். திடீரென்று குரல்கேட்டு என்ன? என வினவுமுன்னமே அங்கு வந்த ஒரு சில பெண்கள் பதபதப்போடும் வார்த்தையை விக்கிக்கொண்டும் 'இயேசுவை இரவு தலைமைக் குருக்களின் ஆட்கள் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். இப்பொழுது ஏதோ விசாரணை நடை பெறுகின்றதாம்" என்றனர்.

மரியாள் எல்லாவற்றையும் விட்டெறிந்து விட்டு வந்தவர்களோடு ஓட்டமும் நடையுமாக தலைமைக் குரு இல்லம் நோக்கிச் சென்றாள். போகும் வழியில்தான் இயேசு பிலாத்துவினால் விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறாராம் என்று அறிந்து அவ்விடம் நோக்கிச் செல்கிறார்கள்.

மிகுந்த பதட்டத்தோடும் விம்மிய அழுகையோடும் செல்லும்வேளை மரியாளுக்குப் பல யோசனைகள்... கடந்த கால நிகழ்வுகள் மனக்கண் முன் வருகின்றன...

தேவதூதன் சொன்ன வார்த்தையை ஏற்றுக்கொண்டதின் விளைவாய் அல்லவா இயேசு பிறந்தார். இவர் இறைவன் மகனாச்சே! எலிசபெத் அம்மா என் வயிற்றில் இருந்த குழந்தையைப் பார்த்து அக்களிப்பால் என்னை வாழ்த்தினார் அல்லவா? பெத்தலகேமில் மகன் பிறந்த நிகழ்வு ஞானிகள் வருகை, எகிப்திற்குக் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக தன் பத்தாவாகிய யோசேப் எகிப்துக்கு தன்னையும் மகனையும் கொண்டு சென்றது, எகிப்திலிருந்து திரும்பிய திருக்குடும்பம் நாசரேத்தில் வாழ்ந்த காலம், வறுமையிலும், செழிப்பாய் வாழ்ந்த நாட்கள், இயேசு தன் வல்லமையால் (மரியாளுக்கு) குறைவின்றி எல்லாம் கிடைத்தமை, இயேசு பன்னிரெண்டு வயதில் எருசலேமில் காணாமல் போனது, ஞானிகள் நடுவில் உட்கார்ந்து விளக்கம் கொடுத்தது, கானாவூரில் தண்ணீரை இரசமாக்கியது, பணிவாழ்வின் காலத்தில் அவர் செய்த அனைத்துப் புதுமைகளையும் பிறர் கூறி அறிந்து அகமகிழ்ந்தமை அனைத்துமே மரியாளின் மனக் கண்முன் திரையாய் ஓடின. இத்தனைக்கு மத்தியிலும் இவர் கடவுளின் மகன் அல்லவா? எப்படி இந்த தலைமைக் குருக்களின் ஆட்கள் அவர்கள்

கைக்குள் இவரை வைக்கமுடியும். அவரை அணுகிச் செல்பவர்களை தன் வல்லமையால் இயலாமலாக்க முடியுமல்லவா? பின் என்ன நடந்தது? ஏன் இவர் மௌனியாகிவிட்டார். அவர் ஏன் தப்பித்துக்கொள்ள முடியவில்லை. ஒருவேளை இறைவன் விருப்பம் இதுவாக இருக்குமோ?

மரியாள் இவற்றையெல்லாம் தன் மனக் கண்முன் இருத்திச் சிந்தித்தவாறு பிலாத்துவின் மாளிகையின் முன் கூடியிருந்த மக்கள் கும்பல் முன் வந்து சேர்ந்தாள். ஒருவாறு இடித்துக்கொண்டு முன்னோக்கி நகர்கின்றாள். மாளிகையை நெருங்கும்வேளை வேதனையிலும், இயலாமையிலும் அலறும் சத்தம் கேட்கின்றது. இது தன் மகனின் குரல்தான் என்று உணர்ந்து கொண்டாள். தன்னை அறியாமல் மகனே என அலறிவிட்டாள். தன்னுடன் வந்த பெண்கள் மரியாளை அணைத்து அமைதிப்படுத்த முயற் சிக்கிறார்கள். சாட்டை அடிச் சத்தமும் அவல அலறல் சத்தமும் தொடர்கின்றன.

இவ்வேளையில் ஒருவர், அவர் நூற்றுவத் தலைவராக இருக்க வேண்டும். சாட்டை அடி மற்றும் அலறல் சத்தம் கேட்ட அறையினுள் நுளைகிறார். ஆத்திரத்தோடும், அதிகாரத் தொனியிலும் கத்துகிறார். அடே! நான் உங்களை அவனை அடிக்கத்தானே சொன்னேன். நீங்கள் அடிப்பதைப் பார்த்தால் அவனை அடித்துக் கொன்றுவிடுவீர்கள் போலிருக்கிறதே! போதும் அவனை வெளியே கொண்டு வாருங்கள் என்றார். (பல அறிஞர்களின் கருத்துப்படி சுமார் 5000 அடிகளுக்கு மேல் இயேசு வாங்கியிருப்பார். சாதாரணமான ஒருவர் இந்த அடியாலே இறந்து போயிருப்பாராம்).

மரியாளுக்குப் பதட்டம் இன்னும் அதிகமாகிறது. மகன் வெளியே வருகிறார். மரியாளின் இதயம் அப்படியே கசக்கிப் பிளிந்ததுபோல் ஓர் உணர்வு! தன் மார்பிலும், தோளிலும் செல்ல மாய் விளையாடிய அழகோவியம் தன் மகன் இவ்வாறான பயங்கர தோற்றத்தில் இருக்கிறாரே! எப்படியாயினும் மகன் தாய் இருவரும் நேருக்கு நேர் சந்திக்கவில்லை.

சரி இனி என்ன நடக்கப் போகின்றது என்று பார்ப்போம். ஐயோ இந்தப் பாரமான சிலுவையை என் மகன் எவ்வாறு தூக்கப் போகிறான்? என ஏங்கினாள். இப்பவே பட்ட அடியாலும் ஓடி வழிந்த இரத்தத்தாலும் நடக்கப் பெலன் இல்லாது தள்ளாடுகிறானே! இந்த அவல நேரத்திலும் மரியாள், “இறைவா இந்தப் பாரமான சிலுவையை சுமக்க மகனுக்கு உதவமாட்டீரா?” என்னும் ஒரு அவல வேண்டுதல். இறைவனின் தாயின் வேதனைக்கு ஒரு ஆறுதலாக சீரேன் ஊர் சீமோனை அனுப்பிப் படை வீரர்களின் கண்ணில் தெரிய வைத்து அவனை சிலுவையை இயேசுவோடு சுமக்க வழி செய்தார்.

சிலுவை சுமந்து மெதுவாக நகரும் வேளை மரியாள் ஒருவாறு இயேசுவை அண்மித்து விட்டனர். இயேசு ஒரு பார்வை விடுகிறார். மரியாளும் நோக்குகிறாள். அந்தப் பார்வையில் இயேசு மரியாளுக்கு இறைதிட்டம் இது என்பதை உணர வைத்தார்.

சிலுவைப்பாதையில் மரியாளும் இணைகிறாள். சிந்தனை: இயேசு ஆண்டவருடன் நம் வாழ்வில் பயணிக்கும்போது இதயம் கசைந்து பிளியுமாய் போல் இருக்கும் வேதனையான நிகழ்வுகள் சுமைகள் சிலுவைகளல்ல. மாறாக, சுகமான சிலுவைகளாக இருக்கும். ■

## ஆண்டவரின் அழைப்புக்குப் பதிலளிப்பதில் துணிவு காட்டுங்கள்...

**ஒவ்வோர் அழைப்பும், வலைகளைக் கைகளில் வைத்துக்கொண்டு, கரையில் நிற்பதல்ல; மாறாக இயேசு நமக்கென குறித்து வைத்துள்ள பாதையில் பின்செல்வதாகும். கடவுளின் வாக்குறுதிகளில் நம்பிக்கை வைப்பதற்கும், அவர் அமைத்துள்ள பாதையில் பின்செல்வதற்கும், மனத்துணிவும், வீரமும் தேவைப்படுகின்றது .**

ஆண்டவரின் அழைப்புக்குப் பதிலளிப்பது என்பது பெரிய சவால்களைச் சந்திப்பதற்கு நம்மையே கையளிப்பதாகும் என்றும், நம் சிறிய படகோடு நம்மைக் கட்டியிருப்பவற்றையும், அறுதியான தெரிவு செய்வதிலிருந்து நம்மைத் தடைசெய்பவற்றையும், பின்னுக்குத் தள்ளுவதற்குத் தயாராக இருப்பதாகும் என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். நம் வாழ்வுக்கு ஆண்டவர் வைத்துள்ள திட்டத்தைக் கண்டு பிடிப்பதற்கு உதவும்படியாகவும், அவர் நமக்காகத் தேர்ந்தெடுத்துள்ள வாழ்வுப் பாதையில் தொடக்கமுதல் நடப்பதற்குத் துணிவைத் தரும்படியாகவும், இந்த உலக நாளில் செபத்தில் இணைந்திருப்போம் என்று தன் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார்.



அப்போது எனக்கு வயது பன்னிரெண்டு
தம்பிக்கு பத்து
பத்து மணிக்கு முன்பே
பள்ளி வேலியால் பாய்ந்து
தலைதெறிக்க ஓடிப்போய்
தகரப்பத்தைக்குள் ஒளித்தநாள்
ரெட்டைப் பிரம்போடு
கந்தையா வாத்தியும் சூரவாயர் அதிபரும்
துரத்திப் பிடிச்சி
வாங்கில வளத்தாட்டி
விளாசித் தீர்த்தார்களே
இதோ வேலி மதிலாகி
தகரக் கொட்டில் காணாமல்போய்
மூன்றுமாடி முளைத்துவிட்டது.

புட்டியாற்றுப் படித்துறையில்லை
குதித்துக் குளிக்கும் குமரிகளுமில்லை
ஊஞ்சலாடும் அரசமரமில்லை
ஊதிப்பெருத்த ஒத்தைப்புளியுமில்லை



**பைந்தமிழ்க்குமரன் டேவிட்**

முகமலர்ந்து பால்சுரக்கும்
சீதாவுமில்லை, வள்ளியுமில்லை



# தாய் மண்ணே...

நுரைதள்ளும் பால்ச்செம்புமில்லை
அப்பனுமில்லை தம்பியுமில்லை

ஆளுக்காள் பேன் பார்க்கும் குரங்குகளில்லை
சுங்கான்பிடிக்கும் பழசுகளில்லை
உலக்கை குத்திய கிழவிகளுமில்லை
உலர்ந்த காற்றுமட்டும் அனலாய் வருகிறது

கடப்பட்டோர், பிடிக்கப்பட்டோர்
தொலைக்கப்பட்டோர், காவுகொள்ளப்பட்டோர்
பட்டியல் பாம்புபோல் நீள்கிறது
என்மண்ணே, என்மண்ணே
எப்படி மறப்பேன் சோகங்களை
எந்தச் சுனாமி வந்து அள்ளிப்போகுமிந்த ஏக்கங்களை.

கருகிச் சுருண்டு கனன்று கிடக்கும் தாய்மண்ணே
என் காலடிகளைப் பதித்து விட்டுச் செல்கிறேன்
மீண்டுமாய் வருவேன் பல்லக்கில்
உன் கருவறையில் துயில்கொள்ள.



## வாழ்த்துகிறோம்!

கல்முனை பாண்டிருப்பு நாவலர் வித்தியாலய அதிபரும், 'தொண்டன்" குடும்பத்தைச் சேர்ந்தவருமான திரு. ஜெயக்கொடி டேவிற் அவர்கள், பொதுச்சேவை ஆணைக்குழுவின் கல்விச்சேவைக் குழுவால் இலங்கை அதிபர் சேவை தரம் 1இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

பிரபல எழுத்தாளரான இவர், சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள் என்பனவற்றை எழுதி வெளியிட்டுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதற் பட்டத்தையும், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதுகலை மானிப்பட்டத்தையும் தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்படிப்பு கல்வி டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.




# "நடந்தது நடந்துவிட்டது, இனி நடக்க வேண்டியவைகளைப் பார்ப்போம்"

இது ஒவ்வொரு மரணமும் வாழ்வோருக்குத் தரும் பாடம்

ஆம் ஆவி பிரிந்தது, அர்ப்பணம் நிறைவு பெற்றது. இயற்கை சீரியது, இறை சித்தம் நிறைவு பெற்றது. மனுக்குல மீட்பு மரணத்தை கடந்து சென்றது. இதோ அன்றும், இன்றும் சீடர்களின் முன் நிற்கும் ஒரு கேள்வி ......... போதகர் போய்விட்டார், இனி யாருடைய போதனைகளை பின்பற்றுவது? இதற்கு சிலுவை தரும் பதிலை கவனமுடன் கேட்போம்.

கீழ்வரும் ஆறு குணங்களை உங்கள் உடமை ஆக்குங்கள். உயிர்விட்ட இறைமகன் உங்களுள் உயிராக வருவார் என்கின்றது - கவனிப்போம்.

1. **கீழ்ப்படிதல் :** இறைவனுக்கு மட்டும் இறுதிவரை கீழ்ப்படி யுங்கள். இயேசு இறுதி மூச்சு வரை இறைவனுக்கு மட்டும் கீழ்ப்படிந்தார். அவர் சீடர் எனும் நீங்கள் அதை மட்டும் செய்யுங்கள்.

2. **உறவுகள் :** மனித உறவின் மாண்பை உணர்ந்து அனைவருக்கும் ஆறுதலாய் இருங்கள். இயேசு தனது தாயையும், அன்புச் சீடரையும், தாய் - மகன் உறவில் ஆறுதல் பெற அழைப்பு விடுத்தார். நீங்களும் இறைவன் - மனிதன் - உலகம் என்ற முப்பரிமான உறவில் அன்பும் ஆறுதலும் ஒருவருள் ஒருவர் பெறுங்கள்.

3. **நன்மை செய்தல் :** நன்மைகள் செய்திட காலமும், வேதனைகளும் தடையாக இருக்கவில்லை. இயேசுவிற்கு கள்வனை "நல்ல கள்வனாக" மாற்றிட கல்வாரியின் காலமும், வேதனைகளும் தடைசெய்யவில்லை. நன்மைகள் செய்திட இனியும் தயைகூர்ந்து நாளும் நேரமும் பார்க்காதீர்கள்.

4. **மன்னித்தல் :** மனிதம் மகிழ்ந்திட மன்னிப்பிற்கு மீறிய மாமருந்து இல்லை. இயேசு மரணத்தின் பிடியிலும் பிதாவே இவர்களை மன்னியும் என்று பிறருக்காக மன்றாடினார். நீங்கள் - எங்களுக்கு தீமை செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல - என்று சத்தியம் செய்கிறீர்கள். இந்த வார்த்தைக்கு உண்மை உள்ளவராய் இருப்பீர்களாக!

5. **அர்ப்பணித்தல் :** நிறைவு உள்ளதாகவும், நிலையானதாகவும் உங்களது அர்ப்பணம் அமையட்டும். இயேசு தனது ஆவியை முழுமையாக இறைவனிடம் அர்ப்பணித்தார். நீங்கள் உங்களிடம் நிறைவாய் உள்ள அன்பு, மன்னிப்பு, அரவணைப்பு ஆகிய பண்பு களை உலகிற்கு நிலையாக அர்ப்பணித்திட உங்களை ஆயத்தப்படுத்துங்கள்.

6. **மனிதத்தில், மரணத்தில் நிறைவு எய்தல் :** இதோ இயேசு இறந்த பின் அவரது விலாவை குத்தித் திறந்தவனுக்கு - ஒளியாக - பார்வையைத் தந்தார். அவனும் இறைமகனை - இறைவனைக் கண்டு பரவசமடைந்தான். நீங்கள், உலகம் உங்கள் விலாவை - இதயத்தைத் திறக்கும்போது, அதனுள் மலர்ந்து மணம் வீசும் மனிதத்தைக் கண்டு பரவசமடையப் பக்குவப்படுங்கள்.

இறைவனுக்கு ஆறு இலட்சணங்கள் உண்டு என சிறுவயது முதல் அறிவீர்கள். இன்று, இந்த மரசிலுவை மனிதனுக்கும் ஆறு இலட்சணங்கள் - குணங்கள் உண்டு என உறுதி செய்துள்ளது. அப்படி என்றால், இன்று நம்மை காணும் பிலாத்து மீண்டும் இதோ மனிதன் என்று அறைகூவல் விட வேண்டாமா?

வாருங்கள் பிலாத்துவிற்கு அந்த நல்ல வாய்ப்பை வழங்குவோம்.....



**வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் :** திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அன்ட் பேணிச்சர்ஸ்,142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி,
மட்டக்களப்பு. தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 13

1) மனிதனுக்கு இணையான அறிவாற்றல் எந்த விலங்குக்கு உண்டு?

.......................................................................................................................

2) பிரேசிலின் மிகப் பெரிய கோடீஸ்வரர் தனக்கு சொந்தமானதை எதை புதைக்க விரும்புவதாக விளம்பரப்படுத்தினார்?

.......................................................................................................................

3) "வெற்றி பெறவேண்டுமென்று போராடாதீர்கள், தோல்வி அடையக்கூடாது என நினைத்துப் போராடுங்கள். உலகம் உங்கள் கையில்" எனக் கூறியவர்:

.......................................................................................................................

4) "நீங்கள் கடவுளுடைய கோயில்; என்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார்" எனும் வசனம் திருவிவிலியத்தில் எப்பகுதியில் காணப்படுகிறது?

.......................................................................................................................

5) எகிப்தின் மாபெரும் இராணுவம் செங்கடலின் நீரால் யாருடைய ஆட்சியில் அழிக்கப்பட்டது? .......................................................................................

6) இன்று இவ்வுலகில் மகிழ்வாய் இருக்கும் இருவகையினர் யாரென்று குறிப்பிடப்படுகின்றது? ..............................................................................................

.......................................................................................................................

7) பின்லாந்தில், படிப்புக்குக் கொடுக்கப்படும் அதே முக்கியத்துவம் வேறெதற்குக் கொடுக்கப்படுகின்றது?

.......................................................................................................................

8) ஐ.நா. அவை "கடல்களைத் தூய்மையாக்குவோம்" என்ற முயற்சியை மேற்கொள்ளக் காரணமாக அமைந்தது எது? ..............................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

9) இயேசுவின் நற்செய்தி அறிவிப்பு மக்கள் மனங்களில் எத்தகைய உணர்வை ஏற்படுத்தியது?

.......................................................................................................................

10) மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களும் அழிந்துபோக தேனீக்கள் எவ்விதம் காரணமாகின்றன?

.......................................................................................................................

.......................................................................................................................

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

பங்கு / தொ.பே.இல : ..........................................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..........................................................

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 13**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி : 30.04.2019



1 சாமுவேல் 19:1-24, 20:2-25

190

திருவிவிலியம் கற்போம்

பரிசுப் போட்டி

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 30.04.2019

**(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

1. தாவீதை ........................ வேண்டுமென்று தம் மகன் யோனத்தானிடமும் தம் அலுவலர் எல்லோரிடமும் சவுல் தெரிவித்தார். அதனால் சவுலின் மகன் யோனத்தான் தாவீதின் மீது மிகுதியான அன்பு கொண்டிருந்தார்.

   அ) துன்புறுத்த ஆ) கொல்ல இ) ஒழிக்க

2. சவுல் யோனத்தானின் வார்த்தைகளைக் கேட்டார்: அதனால் சவுல் ........................ ஆணை! அவன் கொலை செய்யப்படமாட்டான்' என்றார். பின்பு யோனத்தான் தாவீதை அழைத்து இவ்வார்த்தைகளை எல்லாம் அவருக்குக் கூறினார்.

   அ) வாழும் ஆண்டவர்மேல் ஆ) வாழும் கடவுள்மேல் இ) வாழும் இயேசுவின் மேல்

3. தாவீது புறப்பட்டு பெலிஸ்தியர்களுடன் போரிட்டு அவர்களில் மிகுதியானோரை வெட்டி ........................ : அதனால் அவர்கள் சிதறி ஓடினார்கள். பின்னர் ஆண்டவர் அனுப்பிய தீய ஆவி சவுலின் மேல் இறங்கியது.

   அ) வீசினார் ஆ) எறிந்தார் இ) விழ்த்தினார்

4. 'நீர் இன்றிரவே உம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளாவிட்டால் நாளை நீர் கொல்லப்படுவீர்'' என்றார். ஆதலால் மீக்கால் தாவீதைப் ........................ வழியாக இறக்கி விடவே அவரும் அங்கிருந்து ஓடித் தப்பித்துக் கொண்டார்.

   அ) பலகணி ஆ) மாடிப்பாடி இ) பின்பக்க

5. ஆதலால் அவர் அங்கிருந்து இராமாவிலிருந்த நாவோத்துக்குப் புறப்பட்டார்! ........................ அவர் மேலும் இறங்கி வரவே இராமாவின் நாவோத்துக்குச் சென்றடையும் வரை அவரும் இறைவாக்குரைத்தார்.

   அ) இறைவனின் ஆவி ஆ) கடவுளின் ஆவி இ) தூய ஆவி

6. அதற்கு அவர் "........................ இல்லை. நீ சாகமாட்டாய். இதோ என்னோடு கலந்தாலோசிக்காமல் என் தந்தை பெரிதோ சிறிதோ எதுவும் செய்யமாட்டார். இச்செயலை மட்டும் என் தந்தை மறைப்பானேன்? அப்படி நடக்காது என்றார்.

   அ) ஒரு நாளும் ஆ) ஒருக்காலும் இ) ஒருபொழுதும்

7. 'தாவீது தன் சொந்த நகரான பெத்லகேமுக்குச் சென்றுள்ளான். அவன் குடும்பத்தார் அனைவருக்கும் அங்கே ........................ இருக்கிறதாம். அங்கே விரைந்து செல்ல என்னிடம் அனுமதி கேட்டான்' என்று சொல்.

   அ) ஆண்டுப் பலி ஆ) இரங்கல் பலி இ) நன்றிப் பலி

8. நாளை இதே நேரத்தில் அல்லது மூன்றாம் நாளில் என் தந்தையின் கருத்தை அறிவேன்! அது தாவீதுக்கு ........................ இருந்தால் உனக்கு அதைத் தெரிவிக்க ஆளனுப்ப மாட்டேனா?

   அ) பாதகமாய் ஆ) சாதகமாய் இ) அனுகூலமாய்

9. மூன்றாம் நாள் உன்னைக் கண்டிப்பாக தேடுவர். ஆதலால் நீ முன்பு ஒளிந்திருந்த இடத்திற்கே போ! அங்கே ........................ கல் அருகில் ஒளிந்துகொண்டிரு. நான் குறிவைத்து அம்பு எய்வது போல் அப்பக்கம் நோக்கி மூன்று அம்புகளை எய்வேன்.

   அ) ஏசேல் ஆ) சம்மாகு இ)ஏலா

10. அமாவாசை நான் வந்தபோது உணவருந்த அரசர் அமர்ந்தார். அரசர் சுவரோரம் இருக்கும் தமது ........................ வழக்கம்போல் அமர்ந்தார். சவுலுக்கு எதிரில் யோனத்தானும் பக்கவாட்டில் அப்னேரும் அமர்ந்தனர்.

    அ) ஆசனத்தில் ஆ) அரியணையில் இ) இருக்கையில்

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிரிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)

# அறிவை வளர்ப்போம் – 189



பரிசுப் போட்டி

சிறுவர்களுக்கு மட்டும் :
முடிவுத் திகதி :
30.04.2019

(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

1. உபநிடதங்கள் எத்தனை வகைப்படும்:
   (7 – 32 – 12)

2. நிலவில் ஒரு பகல் பொழுது எவ்வளவு நேரம் நீடிக்கிறது?
   (பூமியில் இரண்டு வாரம் – பூமியில் ஒரு வாரம் – பூமியில் நான்கு வாரம்)

3. கம்பளி அதிகம் உற்பத்தி செய்யம் நாடு:
   (ஜெர்மனி – அவுஸ்திரேலியா – கனடா)

4. பாண்டியர்களின் தலைநகரம்:
   (மதுரை – தென்காசி – பாண்டிநாடு)

5. “உண்டு கொழுத்தால் ......................... வளையில் இராது”
   (வண்டு – பூச்சி – நண்டு)

6. “பிறைநுதல் வியர்வை சிந்த அக்ஷயா ஓடினாள்”
   இங்கு பிறைநுதல் என்பது,
   (உம்மைத்தொகை – உவமைத்தொகை – அன்மொழித்தொகை)

பெயர் : ..........................................................
முகவரி : ..........................................................
..........................................................

தபாலகம் / தொ.பே.இல:
..........................................................
பரிசு அனுப்பவேண்டிய பங்கு:
..........................................................

அனுப்பவேண்டிய முகவரி:
திருவிவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 189
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.




**திருவிவிலியம் கற்போம், அறிவை வளர்ப்போம் - 188,**

பங்கு பற்றியோர் 15 பேர், ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதியோர் 10 பேர்.

## திருவிவிலியம் கற்போம் - 188 விடைகள்

சவுலுடன், நாற்பது, போர்க்குரல், எலியாபு, அடியானாகிய, வெண்கலத், ஏளனம், நெற்றியை, எருசலேமுக்கு, அப்னேர்

## அறிவை வளர்ப்போம் - 188 விடைகள்

| | | |
|---|---|---|
| 1. இந்தோனேசியா | 2. அமெரிக்கா | 3. 3000 |
| 4. ஏலக்காய் | 5. நெஞ்சு | 6. ஆறு |

**பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS**

போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி Iம் பிரிவில் 300/= பரிசு பெறுபவர்:

* S. கிதுஷா,
38/5, 3ம் குறுக்குத் தெரு,
மட்டக்களப்பு.

போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி IIம் பிரிவில் 200/= பரிசு பெறுபவர்:

* றொனால் டினோ றாகல்,
I 01 B, பனிச்சையடி,
மட்டக்களப்பு.
* அன்டனட் மியூரின் றாகல்,
72/3, விஜயபுரம்,
மட்டக்களப்பு.
* P. லீரிஷேன்,
இல. 03, காளி கோவில் வீதி,
புன்னைச்சோலை,
மட்டக்களப்பு.
* S. டினோஜன்,
87, புதுவளவு
சொறிக்கல்முனை - 01.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 140 முடிவுகள்**

**1ம் பரிசு - 400/=**

* மெடலின் சில்வா,
81/38, நாவலர் வீதி,
கருவேப்பங்கேணி,
மட்டக்களப்பு.

**2ம் பரிசு - 300/=**

* J. அன்ஷிகா,
159/D, சூசையப்பர் புரம்,
சொறிக்கல்முனை - 01.

**3ம் பரிசு - 200/=**

* க. அபராஜிதன்,
59/1, கதிர்காமர் வீதி,
அமிர்தகழி, மட்டக்களப்பு.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

புல்லுமலை

# செபமாலை அன்னை திருத்தல



## வருடாந்த திருவிழா – 2019

**கொடியேற்றம் :** 26.04.2019

**திருவிழா :** 05.05.2019

குறிப்பு :

திருத்தலம் நோக்கிய பாத யாத்திரை **03.05.2019** வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்திலிருந்து திருப்பலியுடன் ஆரம்பமாகி வழமையான வீதியூடாக ஆலயத்தை வந்தடையும்.



திருவிழா கூட்டுத் திருப்பலி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு எமது மறை மாவட்ட ஆயரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.

**அனைவரும் வருவீர்! அன்னையின் ஆசிர் பெருவீர்!!**



## காற்றில் கலந்து வரும் .....

இலங்கை வானொலி தேசிய சேவையில்

### கிறிஸ்தவ நிகழ்ச்சிகள் - தமிழ்

கத்தோலிக்க நற்சிந்தனைகள் - காலை 5.55 மணி

நாள் : மார்ச் 30, 31, ஏப்ரல் 01, 02, 03, 04, 05,
13, 14, 15, 16, 17, 18, 19
27, 28, 29, 30, மே 01, 02, 03

புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி) - மாலை 07.00 மணி

நாள் : 07, 21

திருவிவிலிய நாடகம், திருஅவைச் செய்திகள், வழிபாடு, பாடல்கள் இன்னும் .......

சிறுவர் உலகம் (சிறுவர் நிகழ்ச்சி) - மாலை 04.00 மணி

நாள் : 09, 23

கதையும் கருத்தும், குறு நாடகம், திருவிவிலியக் கதைகள், பாடல்கள் இன்னும்.....

தொடர்பு சமூகத் தொடர்பு நிலையம், அ.பெ.எண் - 44, மட்டக்களப்பு.